வைத்திய கலாநிதி

THE VAIDYA KALANIDHI

EDITOR
Pandit M. Duraiswami Aiyangar
Ayurveda Bhushan

பத்திராதிபர்
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்
ஆயுர்வேத பூஷண

புஸ்தகம் 1. Vol I. | ப்ரமாதீச ௵ கார்த்திகை ௴ —DECEMBER 1913. | ஸஞ்சிகை 4. No. 4.

DENGUE FEVER.

டெங்கு என்னும் வாதஜ்வரம்

By
Dr. J. V. RAMASWAMI NAIDU, L. M. & S.
Physician and Surgeon.

டெங்கு ஜ்வரம் என்னும் வாதஜ்வரம் இந்த தேசத்தில் 1824-ம் வருஷத்திற்கு முன் இருந்ததாகத் தெரியவில்லை. 1824-ம் வருஷத்தில் இரங்கூனிலிருந்து கல்கத்தாமார்க்கமாய் சென்னைப்பட்டணத்தில் பிரவேசித்ததாய் சொல்லப்படுகிறது. அது முதல் சில வருஷங்களுக்கு ஒரு முறையாக அப்போதைக்கப்போது வந்து இது கொண்டிருக்கிறதாக ஏற்படுகிறது. இந்த ரோகமானது பிறகு 1871-1872-ம் வருஷங்களில் பம்பாய்க்கு, ஏடன் வழியாக ஜான்ஜியார் தேசத்திலிருந்து வந்ததாகவும் தெரியவருகிறது.

ஐரோப்பா தேசத்தில் கடீஜ் (Cadiz) என்னும் பட்டணம் தவிர வேறெங்கும் இந்த ரோகம் உண்டானதில்லை. கடீஜ் பட்டணத்தில் 17 4-ம் வருஷத்திலும், 1867-ம் வருஷத்திலும் கண்டதாகக் கூறப்படுகிறது.

இவ்வியாதி ஒருவரிடத்திலிருந்து மற்றவர்களிடமும் பரவும் தன்மையுள்ளதாகையால், தொற்று வியாதி என்று தீர்மானிக்கப்பட்டது. மனுஷியர் இங்குமங்கும் ஸஞ்சரிப்பதால், ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் பரவும். இது ஏதேனும் ஒரு ஊரில் பிரவேசித்தால், அவ்வூரிலுள்ள எல்லா ஜனங்களையும் வருந்தச் செய்யுந் தன்மையுள்ள பெருவாரி வியாதிகளைச் சேர்ந்தது. இதனிடமிருந்து சிலர் தப்புவதும் அரிது.

இவ்வியாதிக்கு முக்கியமான குறிகள்:-கணுக்களிலும் (Joints) சதைகளிலும் (Mulscles) ஓயாத கடுமையான வலி, அசக்தி, ஆரம்பத்தில் ஒரு தடவையும் அந்தியத்தில் ஒரு தடவையும் காணும்படியான ஜ்வரம், தேஹத்தின் மேல் தட்டம்மைபோன்ற சிவந்த தழும்புகள் இவைகளேயாம்.

இந்த வியாதி ஸம்பந்தமான விஷம் ஒருவர் தேஹத்தில் ஸம்பந்தப்பட்டபின் வெளிக்குக் காணாமல் மறைவாய் (Inculcation Period) 5-அல்லது 6-நாள் இருக்கலாம்.

இந்த வியாதி அநேகமாய் திடீரென்று ஒரு விதமான பூர்வ ரூபம் அல்லது முன் குறியுமில்லாமல் வருவதுண்டு. முதலில் கைவிரல்களைச் சேர்ந்த பூட்டுகளிலோ, அல்லது கால்விரல்களைச் சேர்ந்த பூட்டுகளிலோ, அல்லது வேறு எந்தப் பூட்டுகளிலாவது நோய் ஆரம்பித்து, கிரமமாய் அதிகரித்து, மற்றப் பூட்டுகளிலும்

எலும்புகளிலும் நோயுண்டாகும். ஒரு பூட்டை விட்டு மற்றொரு பூட்டுக்கு நோய் மாறுவது முண்டு.

சிலருக்கு திடீரென்று வராமல், இரண்டொரு நாளுக்கு முன்னதாகவே அதிக ஓய்ச்சல், மயக்கம், ஓக்காளம், சிலுசிலுப்பு, தலையிலும் கண்விழிகளிலும் கணுக்களிலும் நோய் முதலிய பூர்வரூபங்களென்னும் முற்குறிகளுடன் ஆரம்பமாவது முண்டு. ஆனால், இவ்வியாதி பெரும்பான்மையோருக்கும் திடீரென்று தான் வரும். மூன்றும் நாள் தேஹம் முழுவதிலும் சிவந்த தழும்புகள் காணும். ஜ்வரமும் வரும். முகம் சிவந்தும் ஊதியும் இருப்பதாகக் காணும். தொண்டை கம்மலாயிருக்கும். கண்கள் சிவந்திருக்கும். நாக்கின் ஓரங்கள் சிவந்தும், மத்தியபாகம் வெண்மையான படையுள்ளதாகவு மிருக்கும். நாடியானது ஒரு நிமிஷத்துக்கு 100-முதல் 120-அல்லது 140-வரையிலும் வேகமுள்ளதாய் அடித்துக் கொள்ளும். ஜ்வரம் 100-டிக்ரி முதல் 103 வரையிலும் ஏறலாம். சில கடுமையான கேஸுகளில் ஜ்வரம் 105-டிக்கிரி வரையில் மேலோங்கி அடிப்பது முண்டு.

மேற்கண்ட குறிகள் 24-அல்லது 48-மணி நேரம் வரையில் போராடி, அதன் பிறகு கிரமமாகத் தணியும்.

இரண்டு மூன்று அல்லது நான்கு நாள் கழித்து,மறுபடியும் ஜ்வரமும், உடம்பில் தழும்புகளும் காணுவதுண்டு. இரண்டாம் தடவை காணும் தழும்பு பித்தத்தழும்பைப் (Urticaria) போலிருக்கும். முதலில் உள்ளங்கைகளில் ஆரம்பிக்கும். சிலருக்கு மேல் தோல் (Cuticle) தவிடுபோலாவது, படைப்படையாகவாவது சிதைந்து உதிருவதுண்டு. சிலருக்கு இது அவ்வளவு அதிகமாயில்லாமல் இலேசாகவுமிருக்கும்.

இந்தக் குறிகள் பிறகு படிப்படியாய் தணிந்துவிடும். அதிக பலஹீனம், சொற்பமாய் கணுக்களில் நோய் இவைகள் மாத்திரம் சில வாரங்கள் வரையிலும் இருக்கும். சிலருக்கு இவ் வியாதி, தணிந்திருந்தும், பிறகு மறுபடியும் இரண்டு மூன்று தடவை வருவதுண்டு. மேற்கூறியவை பொதுவாக இவ்வியாதிக்குள்ள முக்கிய விவரங்களாகும். இதில் மாறுபாடுகள் பல காரணங்களால் நேரிடுவதுமுண்டு. தேஹத்திற் காணும் தழும்புகள், சில கேஸுகளில் அதிகமாயிருப்பதும், அல்லது ஸ்வல்பமாயு மிருப்பதுண்டு. சிலருக்குத் தழும்புகளே காணாமலுமிருக்கும்.

ஜ்வரத்துடன் பிதற்றலும் (Delerium) குழந்தைகளுக்கு வலி அல்லது இசிவும் (Convulsions) காணுவது வழக்கம். சில ஸமயம் வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் குடலிலிருந்தும் கருப்பையிலிருந்தும் உதிரம் பொசிந்து வரும். யக்ருத் என்னும் கல்லீரல் ஸம்பந்தமான வியாதிகள், செவிட்டுத்தனம், கண் பார்வை மட்டுப்படுவது, பேதி, சீதபேதி, சித்தப்பிரமை (Insanity) முதலிய கடுங்குறிகளும் இந்த வியாதியால் ஸம்பவிக்கலாம்.

இந்த வியாதியால் மரணம் நேரிடுவது அரிது. ஒரு தடவை வந்தால் மறு தடவை வராதென்று நினைப்பதற்கில்லை. ஸாதாரணமாய் கீல்வாயுவுக்குக் கொடுக்கும் ஔஷதங்கள் இவ்வியாதிக்குப் பயன் படாது. பெல்லடோனா திராவகம் (Ticture Belladona) ஒன்று தான் உபயோகமுள்ளதாகத் தோன்றுகிறது.

THE PREVENTION AND TREATMENT OF MALARIAL FEVERS.

முறைக் காய்ச்சல் என்னும் விஷம ஜ்வரத்தைப் போக்கும் வகைகள்.

BY

Dr. U. RAMA RAO,

Physician and Surgeon.

காரணமும் குறிகளும்.

1. இரத்தத்தில் மிகவும் ஸூக்ஷ்மமான சில கிருமிகள் (Parasites) சேருவதால் முறைக் காய்ச்சல் உண்டாகின்றது. இந்த சிற்றுயிர்கள் இரத்தத்திலிருந்துகொண்டு விருத்தியாகின்றன. இக்கிருமிகள் எண்ணிக்கையில் மிகவும் அதிகமானவுடனே ஜ்வரத்தை உண்டாக்கின்றன.

2. விஷமஜ்வரகிருமிகள் இரத்தத்தில் சேர்ந்திருப்பதின் . முக்கியமான ஜாடையென்னவென்றால், ஸாதாரணமாய் குறித்த நேரங்களில் ஓர்விதமான ஜ்வரம் வருவதுதான். இந்த ஜ்வரம் அடிக்கடியும் தணிந்து விடுகின்றது. தேஹ உஷ்ணமானது ஒருவேளை ஸம ஸ்திதிக்காவது அதற்கும் கீழ் ஸ்திதிக்காவது வந்து, மறுபடியும் உயரும். இந்த ஜ்வரம் வழக்கமாக ஏற்பட்ட காலக் கிரமங்களில் அனுஸரித்து வரும். 24-மணிக்கு ஒரு தடவையாவது, 48-மணிக்கு ஒரு தடவையாவது, அல்லது 72-மணிக்கு ஒரு தடவையாவது வரும். இவை முறையே அந்யேத்யுஷ்கம், த்ருதீயகம், சாதுர்த்திகம் என்று மூன்று பெயர்களை உடையன.

3 எந்த விதமான ஜ்வரமாயிருந்தபோதிலும், அதற்கு மூன்று நிலைமைகளுண்டு. குளிர்ச்சியான நிலைமை, வெப்பமான நிலைமை, வேர்வை விடும்படியான நிலைமை. குளிர்ச்சியான நிலைமையில் தேஹ முழுமையும், தலை முதல் கால்வரையில் நடுக்கமுண்டாகும். இந்த குளிர்ந்த நிலைமையிலிருந்து உஷ்ணம் மாத்திரம் அதிகமாய்க் கொண்டு வரும். சிறிது நேரத்திற்கெல்லாம் நடுக்கம் நின்றுபோய், உஷ்ணம் மாத்திரம் 103-முதல் 104-அல்லது சில வேளைகளில் 105-டிக்ரியும், அல்லது அதற்கு மேலாகவும் அதிகரிக்கும். சுமார் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, உஷ்ண நிலைமை மறைந்து போய், நோயாளிக்கு விசேஷமாக வேர்வை விட்டு ஜ்வரமும் சீக்கிரம் குறைந்து விடுகிறது.

தடுக்கும் முறை.

4. முறைஜ்வரம் என்பது தொற்றுவியாதியில் சேர்ந்தது. அது கொசுக்கள் மூலமாய் பரவுகிறது. முறைஜ்வரம் வந்திருக்கும் ஒரு மனிதனை ஒரு கொசு கடித்தால், அம்மனிதன் உதிரத்திலிருக்கும் விஷமஜ்வர கிருமிகளில் (Parasites) சிலது அக்கொசுவின் வயிற்றில் புகும். அக்கொசு அனோபிலெஸ் (Anopheles) என்கிற ஜாதியைச் சேர்ந்த ஒரு விதமான கொசுவாயிருந்தால், அதனுடைய வயிற்றில் அந்தக் கிருமிகள் அபிவிருத்தி யடைந்து, வயிற்றிலிருந்து, இரத்தம் அதன் உடலெங்கும் வியாபிப்பதால் அக்கிருமிகள் அதன் வாயின் உமிழ்நீரில் சேரும். அந்தக் கொசு ஒருவனைக் கடிக்கும்போது, இந்த விஷத்தை அம்மனிதன் இரத்தத்தில் பிரவேசிக்கச் செய்கிறது. பிறகு, யாருடைய இரத்தத்திலிருந்து அந்த விஷம் எடுக்கப்பட்டதோ, அவனுக்கு நேர்ந்த ஜ்வரம்போலவே மற்றொருவனுக்கும் உண்டு பண்ணுகிறது. ஆகையால், மலேரியாஜ்வரங்கள், அனோபிலெஸ் ஜாதியைச் சேர்ந்த கொசுக்கள் கடிப்பதாலேயே உண்டாகின்றன.

5. முன்னொரு காலத்தில் நினைத்திருந்தபடி, நமக்கு மலேரியாஜ்வரம் அசுத்தமான ஜலம் பானம் செய்வதினாலாவது, பூமியிலிருந்தாவது, அசுத்தமான காற்றைக் கிரஹிப்பதினாலாவது உண்டாவதில்லை. ஜலமும் காற்றும் மலேரியாவுக்கு எவ்விதமாக ஸம்மந்தப்பட்ட

வை யென்றால், அவைகள், மலேரியாவைக் கொண்டுவரும் கொசுக்களுக்கு இருப்பிடமாயிருக்கின்றன. மலேரியா ஜ்வரங்கள் கொசுக்கள் மூலமாகத்தான் வியாபிக்கின்றனவென்பதும், ஒரு மனிதனிடத்திலிருந்து மற்றொருவனுக்கு வேறே எவ்விதமாயும் ஒட்டவைக்க முடியாதென்பதும் நிச்சயமாய் தீர்மானிக்கப்பட்ட விஷயமாகும்.

6. நல்லதான ஒரு கொசுவலையில்லாமல் எப்போதும் நித்திரை செய்யக்கூடாது. கொசுக்கள் சரீரத்தைக் கடிக்காமலிருப்பதற்காக, மாலை நேரங்களில் உடம்பெங்கும் உடுப்புகளைப்போட்டு மூடிக்கொள்ளவேண்டும். ஸாயங்காலங்களில் உடுப்புகளைப்போட்டுக்கொள்ளாமல் வெளியே போகவாவது, வீட்டின் தாழ்வாரத்தில் உட்காரவாவது கூடாது. வீட்டின் வாசல்களையும் ஜன்னல்களையும் கொசுக்கள் வரவொட்டாமல் வலைகளால் மூடி வைக்கவேண்டியது.

7. பெரிய கொசுக்கள் வெயிலிக்கு ஈதிரில் நின்று அவ்வுஷ்ணத்தை பொறுக்கமாட்டா. ஆகையால், அவை வெயில் வேளையில் வீடுகள், செடிகள், இன்னும் அவ்விதமான வேறு இடங்களில் பதுங்கும். ஆகவே மத்தியான வேளையில் இக் கொசுக்கள் நம்மைக் கடிக்கும் என்கிற பயம் வேண்டாம். இந்த அனோபிலெஸ் கொசுக்களின் முக்கியமான குணம் என்னவென்றால், சூர்யாஸ்தமனத்திற்கும் சூர்யோதயத்திற்கும் மத்தியில் இராத்திரி வேளையிலேயே எப்போதும் கடிக்கின்றன. ஆகையால், பெரும்பாலும் பகல் காலத்தைவிட இராத்திரியிலேயே மலேரியாஜ்வரம் வருகிறதென்கிற பயம் இருக்கவேண்டும்.

8. பாய்ச்சல் அல்லது ஓட்டமில்லாத குட்டைகளை யெல்லாம் உலர்ந்த மண்ணால் தூர்த்துவிட வேண்டியது. வீட்டைச் சுற்றிலும் ஜலம் தேங்கி நிற்காதபடி நன்றாய் ஜலதாரைகள் கட்டிவிடவேண்டும். வீடு எங்கும் உலர்ந்திருக்க வேண்டும். வெளியே போக முடியாமல் ஜலம் ஏதாவது தங்கியிருந்தால், அதில் கொசுக்கள் உற்பத்தியாகாமலிருக்கும் பொருட்டு, அஜ்ஜலத்தின்மேல் கிருஸ்னாயில் போடலாம். அந்த கிருஸ்னாயில் ஜலத்திலிருக்கும் புழுக்களைக் கொன்றுவிடுவதோடும் கூட, ஜலத்தின்மேல் முட்டையிட வரும் பெரிய கொசுக்களையும் கொன்றுவிடுகிறது. மலேரியாஜ்வரங்கள் இருப்பதாகத் தெரிந்தவிடங்களில் எவ்விதமான நீரோடையாவது 10 நாள் அல்லது 14-நாள் தங்கியிருக்குமானால், அதை ஆரோக்யத்திற்கு அபாயகரமானதாகவே நினைக்கவேண்டும்.

9. ஜலம் தங்கும்படியான உபயோகமற்ற உடைந்த வீட்டு ஸாமான்கள்—அதாவது காலியான பூந்தொட்டிகள், வெறும் தகரடப்பிகள் முதலானவைகளை ஜாக்கிரதையாய் அழித்து விடவாவது, அல்லது ஒழித்துவிடவாவது வேண்டும். வீட்டின் உபயோகத்திற்காக தண்ணீரைக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு ஆதாரமான எல்லாத் தொட்டிகளையும் வாய்க்கால்களையும் குறைந்தபக்ஷம் 8-நாளைக்கு ஒருதடவையாவது சுத்திசெய்யவேண்டும். கனமாக ஒரு மழை பெய்தவுடனே, தோட்டத்தின் நிலத்தைப் பரிசோதித்து, அங்குமிங்குமிருக்கும் சிறிய பள்ளங்களையெல்லாம் தூர்த்து ஸமமாக்க வேண்டியது.

10. தும்பு சேர்ந்த உடுப்புகளையாவது, திரைகளையாவது, இன்னும் அழுக்கு வஸ்திரங்களையாவது ஆணிகளிலும் மூலைகளிலும் தொங்கவிட்டுவைக்கக் கூடாது. இவைகளால்தான் முக்கியமாய் கொசுக்கள் வந்து சேருகின்றன. ஆகையால், அவைகளை நன்றாய் மூடப்பட்ட பெட்டிகளில் வைக்க வேண்டும்.

11. எவ்விதமான புகையும் கொசுக்களைத் ரத்திவிடும்; இன்னும் புகை அதிகமா ருந்தால் அவைகளை அடக்கிவிடும். கொசுக் ளைக் கொல்லவேண்டுமானால், வீட்டிலுள்ள ந்துகள் எல்லாவற்றையும் நன்றாய் மூடி ட்டு, புகை நேராய் அந்த கொசுக்களிடத்தில் சேரும்படி செய்யவேண்டும். ஸாதாரணமாய் ஷேதபணை யில்லாததும், இந்துக்கள் எல்லா டுகளிலும் கிடைக்கக் கூடியதுமானது ஸாம் ராணி. இதையும் மற்றும் கந்தகம், வேப் லை, புகையிலை முதலானவைகளையும் எரிக் லாம்.

12. மலேரியாஜ்வரத்தைத் தடுப்பதற்கு ல்லாவற்றிற்கும் மேலானதும் நிச்சயமாய் ம்பக்கூடியதுமான வழி யென்னவென்றால், இந்த ஜ்வரம் பரவி யிருக்குமிடத்தில் வஸிக் கும் வரையில், 7-நாளைக்கு ஒருமுறை இரண்டு ள் அடுத்தடுத்து 10-க்ரெயின்ஸ் குயினை ஸாப்பிடவேண்டும். மலேரியா கிருமிகள் சேர்ந்திருக்கும் எல்லாமனிதர்களையும் குயினை கொடுத்து, அவர்களுடைய இரத்தத்தி லுள்ள விஷக்கிருமிகளை அழித்து அவர்களைக் காக்க வேண்டும்

சிகித்சை.

13. மலேரியா ஜ்வரத்தை ஸ்வஸ்தப் படுத் துவதற்கு குயினைதான் தகுந்த மருந்து. அதை முறைப்படியே போதுமான அளவில் கொடுத்து வந்தால், மலேரியல்ஜ்வரம் குண மாகாமல் போவதில்லை. பெரியவர்களுக்கு, ஜ்வரத்தில் எந்த நிலைமையிலும், 20-க்ரெயின்ஸ் குயினைவை எலுமிச்சம்பழ ரஸத்தில் சேர்த் துக் கொடுத்துவிடலாம். ஒருதடவை கொடு த்து, 6-மணி நேரத்திற்குப் பிறகு, மறுபடி யும் 10 - க்ரெயின்ஸ் கொடுக்கவேண்டியது. அம்மாதிரி 6-முறை ஸாப்பிடவேண்டியது. அதன்பின், ஒரு வாரம்வரையில் 1-நாளைக்கு மூன்றுதரம் 5-க்ரெயின்ஸ் ஸாப்பிடவேண்டியது. வயிற்றைச் சுத்தப்படுத்தும்படியான மருந்து ஏதாவது ஸாப்பிட்டு, காலப் பிரவிருத்தி சரியா யிருக்கும்படி செய்துகொள்ள வேண்டும்.

NEOPATHY.

தற்கால சிகித்ஸை.

BY

Mr. T. D. S. MURTI.

இக்காலத்தில் இந்த தேசத்தில் ரோகங்களுக்குப் பலவிதமான பரிஹார வழிகள் ஏற்பட்டுள. இந்த தேசத்தின் சரித்திரத்தை யுணர்ந்த யாவரும் இதற்குக் காரணம் இன்னதென்றும் அறிந்தே இருக்கின்றனர். அந்தந்த காலத்தில் இத்தேசத்தில் அரசு செலுத்தி வந்த பல தேசத்தாருள் ஒவ்வொருவரும், தம் தம் ஜாதீய வைத்தியர்களைக் கொண்டு வியாதிகளை நிவ்ருத்தி செய்துகொண்டு வந்தார்களென்றும், அவ்விதம் செய்து வந்த அவர்களில் சிலர் இத்தேசத்தில் அங்கங்கே காலக் கிரமத்தில் நிலைக்க நேரிட்டு, பல வகுப்பினர்களும், அவரவர்க்குரிய பல சிகித்ஸாக் கிரமங்களையும் நடத்திவரலாயினர். எந்தெந்த காலத்தில் எவரெவர் அரசு புரிந்தனரோ, அந்தந்த ஜாதியாரின் வைத்தியக் கிரமமே அவரவர் காலங்களில் மேலாகக் கொள்ளப்பட்டுவந்தது போல் தற்காலத்திலும் நடப்பதால், இராஜாங்க பரிபாலனஞ் செய்பவரின் வைத்தியக் கிரமம் தவிர்த்து, மற்றவைகள் பிரவித்தமாக சொல்லிக் கொள்ளக் கூடிய நிலைமை பெறாதவைகளாக ஆய்விட்டன.

தற்காலத்தில் நமது காருண்ணிய ஆங்கிலேய அரசாட்சியில், இப்பாரதகண்டம் முற்றிலும் இதற்கு முன்போலல்லாது, தேசீய வைத்தியமும் ஆங்காங்கு கூடவே நடந்து

வருகின்றதும் தவிர, அவைகள் க்ஷீணியாமலிருக்குமாறு தகுந்த தர்மாத்மாக்களால் ஏற்படுத்தப்பட்டு நடந்துவரும் வைத்திய வித்தியாசாலைகள் ஒழுங்குடன் நடத்தப்பெற்றும் வருவதால், சுதேசவைத்திய முறைகள் முன்போல் க்ஷீணமடையாது, முன்னுக்கு வரும் என்கிற நம்பிக்கையிருக்கிறது. பல குழந்தைகளை ஈன்று பரிபாலிக்கும் தாயானவள், அப்போதைக்கப்போது அழுது தமது விருப்பத்தை அறிவிக்கும் குழந்தைகளிடம் அன்பு பாராட்டி ஆதரிப்பது போல், நாம் நம்முடைய குறைகளையும், நமது காரியங்களை விருத்தி செய்துகொள்ளவேண்டிய வகைகளையும் அப்போதைக்கப்போது நமது அரசாங்கத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ளாததால், அபிவிருத்தி விஷயத்தில் சில ஸங்கடங்கள் நேரிடுவது ஸஹஜமேயானாலும், நாமே அவைகளை ஒருவாறு பரிஹரித்துக் கொள்ளலாம்.

யூனானி, ஆயுர்வேதம், ஆங்கிலம் என்னும் மூன்றுவித சிகித்ஸா கிரமங்கள் விசேஷமாக நடந்துவரும் இக்காலத்தில், தற்காலசிகித்ஸை (Neopathy) என்பது என்ன? அது இவைகளைக் காட்டிலும் வேறா? இப்பொழுது அதற்கு வந்த அவசியம் என்ன? என்ற வினாக்கள் இதைப்படிக்கும் ஒவ்வொருவருக்கும் மனதில் தோன்றக்கூடும். இவைபோன்ற சங்கைகளுக்கு ஒருவாறு விடைகள் சுருக்கமாக எழுதி, பிறகு கிரமமாக விஷயங்கள் விரிவாய் எழுதப்படும்.

தேசம், காலம், ஊண், நடை, உடை, வஸதி முதலியவைகளுக்கேற்ப, வியாதிகளும் ஜீவராசிகளிடம் அணுகுகின்றனவாதலால், அந்தந்த ஜாதியார் தம் தம் தேசீயவைத்தியமாகிய ஆயுர்வேதம், யூனானி, ஆங்கிலம் என்கிற முறைகளின் படி ரோகபரிஹாரகிரமங்களை இந்து-மகம்மதிய-ஆங்கில ஜாதியார்கள் முறையே கையாண்டு வருகின்றனர். அவரவர்களுடைய தேசங்களை விட்டுப் பிற நாடுகளுக்கு வெளியேறிய காலங்களிலும், அவரவர்களுடைய தேசீய சிகித்ஸாகிரமங்களையே பிரியத்தினாலும், பழக்கத்தினாலும், அவசியத்தினாலும் கையாண்டார்கள். சென்ற விடங்களில் சிற்சிலர் ஸ்திரவாஸிகளாக வஸிக்க நேரிட்ட காலங்களில், அந்தந்த தேசங்களில் தங்களுக்கு நேரிட்டிருக்கும் ஆசார விவஹாரங்களுக்கேற்ப, அவரவர்களுடைய ஜாதிக்கு இயல்பான சிகித்ஸாகிரமங்களில் சிலவற்றைக் கூட்டியும், வேறு சிலவற்றைக் கழித்தும், மற்றும் சிலதை மாற்றியும் ரோகபரிஹாரம் செய்துகொள்ள வேண்டியதாய் ஏற்பட்டு, அவ்விதம் ஸமயோசிதமாகவே செய்து வர நேரிட்டது. இத்தேசவாஸியாகிய ஜனங்களோ, நமது தேசத்தில் அரசு செலுத்திவந்த ஒவ்வொரு ஜாதியாரின் நடை உடை பாவனை ஊண் முதலியவற்றைக் கையாடத்தொடங்கினரேயல்லாமல், அததற்கேற்ற பரிஹாரமுறைகளைச் சீர்திருத்தாமல், நமது தேசீயவைத்திய சாஸ்திர விஷயங்களில் அபிமானமுமில்லாது, நமது வைத்தியத்தையும் மறந்து, அன்னியதேசத்து வைத்தியமுறைகளின்படியும் பரிஹாரம் செய்துகொண்டு வருகிறார்கள். ஸேது, ஹிமாலயம், ஸிந்து, பிரம்மபுத்ரா என்கின்ற நான் கெல்லைகளுக்கும் இடையில், இப்பூகோளத்தின் நேத்திரஸ்தானமாயிருக்கும் பரதகண்டமானது, இந்த பூமியின் எல்லா கண்டங்களிலும் அல்லது எல்லாத் தேசங்களிலுமுள்ள ஸகலவித சீதோஷ்ணஸ்திதியையும் பெற்றிருக்கின்றது. இக்காரணத்தினாலேயே, சீதோஷ்ண நிலைமைகளால் பலவித மாறுபாடுகளடைந்த அநேக நாடுகளில், அந்தந்த நாடுகளின் தன்மைக்குத் தகுந்தவாறு தயார் செய்யப்பட்ட ஔஷதங்கள், ஆங்காங்கு பலவித சீதோஷ்ண நிலைமை

களையும் பெற்ற இப்பரதகண்டத்தில் உபயோகிக்கப்பட்டு, அவைகளால் சிறு குணங்களுண்டாவதைக் கண்டு, சுதேசவைத்தியாபிவிருத்தி விஷயத்தில் கவலையற்றிருக்கின்றோம். நமது தேசத்தை விட்டு அயல்நாடுகளுக்குச் சென்று அங்கங்கே நமது ஜனங்கள் கிரமமாக குடியேறி விடுகிறபடியாலும், நாம் வஸிக்குமிடத்திலேயே நடை உடை பாவனை ஊண்முதலியவற்றை மாற்றியிருப்பதாலும், காடுகள் குன்று முதலியவைகள் இருந்த விடங்களில் தனித்தனியே கிராமங்களில் வஸித்து வந்த நமது ஜனங்கள், பட்டணங்களிலும் அதிக ஜனஸங்க்யையுள்ள இடங்களிலும் வஸித்து வருகிறபடியாலும், காடு குன்றுகள் எல்லாம் மனிதருடைய வசத்தில் அகப்பட்டு, பண்படுத்தப்பட்டு, ஆகவே காலகதிகள் மாறி, சீதோஷ்ணம் மழை முதலியவைகளும் மாறி நடைபெற்று வருகிறதென்பது பிரத்தியக்ஷமாய் இப்பொழுது காணப்படுவதாலும், நமது ஜனங்கள் நாகரீகத் தன்மையை நாடுவதாக பிரமித்து நமது ஏனைய வைத்தியர்களைப் போல், தேசிய வைத்திய முறைகளைச் சீர்படுத்திக் கொள்ளப் ப்ரயத்தனபடாமலிருப்பது நமது தௌர்ப்பாக்கியமென்றே கருதவேண்டும். பிறதேச வைத்திய முறைகளின்படி சிகித்ஸைகள் நமக்குக் கிடைப்பது பற்றி, நமது சுபாவத்திற்கேற்றதும், ஊண் முதலியவற்றிற்கு இசைந்ததும், நமது தேசத்தில் ஆங்காங்குள்ள சீதோஷ்ணங்களுக்கேற்ப அந்தந்த காலத்தில் பிரம்மா முதல், இருஷிகள், ஸித்தர்கள் பண்டிதர்கள் இவர்கள் ஈறாக பரம்பரா ப்ராப்தமான இந்த ஆயுர்வேத சிகித்ஸாமுறையை தற்காலத்திய சுபாவத்துக்கு இணங்க நடத்த முயன்று, தமது சிற்றறிவிற் கெட்டிய மட்டும் பிரயோகித்து வரப்படுவதே "தற்கால சிகித்ஸை" (Neopathy) என்று சொல்லப்படுகிறதே தவிர, இது நமது ஆயுர்வேதத்தைக் காட்டிலும் வேறுபட்டதல்ல வென்றும், ஆனால் அதின் மாறுபாடென்றும் அறிந்து கொள்ள வேண்டும்.

மேற்கூறிய காரணங்களால் அவ்வித மாறுபாடுகள் அவசியமென்றும், அவ்விதம் முன்னோர்களால் செய்யப்பட்ட தென்றும் அறியப்படுகிறதல்லவா? நான் செய்யும் இச்சிறிய முயர்ச்சியும், இனி கூறப்போகும் விஷயமும் தகுந்த ஆயுர்வேத பண்டிதர்களின் மனதிற் பதிந்து, யுக்தமானதைச் சரிவர செய்து முடிக்கத் தூண்டுதல் செய்யும் ஓர், பீஜமாகவும், "தற்கால சிகித்ஸை" என்னும் மேற்படி நூதன சிகித்ஸா முறைக்கு முதலில் ஒரு பாடபுஸ்தகம் போலவும் ஆகுமென்று நினைக்கிறேன்.

(தொடரும்)

THE PROGRESS OF INDIAN MEDICINES.

சுதேச வைத்தியாபிவிருத்தி.

BY

Mr. K. S. DURAISAMI PANDITHAR,

Medical Practitioner.

ஸர்வலோக நாயகனாகிய கடவுள் இந்த பிரபஞ்சத்தை உண்டாக்குங் காலத்திலேயே அதிலுள்ள எல்லாப் பொருள்களையும் ஒன்றுக்கொன்று ஆதாரமாக ஏற்படுத்தி யிருக்கின்றார். இந்த விஷயத்தை நாம் உற்று நோக்குகையில், அதிருஷ்டியிலும் திருஷ்டியிலுமுள்ள சராசரப் பொருள்களில் அனேகம் ஔஷதங்களாகவும், சில ரோகங்களுக்குக் காரணமாகவும் புலப்படுகின்றன. அதனால், சுபாவத்திலேயே சில நோய்கள் நிவிருத்தியாகின்றன; பல நோய்கள் விருத்தியாகின்றன. தகுந்த சிகித்ஸாக்கிரமத்தினால் நிவிருத்தியாகும் நோய்களின் பற்பல பிரிவுகளைப் பற்றியும், அதற்கேற்ற ஔஷதப்பிரயோகங்களைப் பற்றியும் தனியாக

சாஸ்திரங்களும், அனுபவங்களும் எல்லாப்பாஷைகளிலும் எழுதப்பட்டிருக்கின்றன.

ஔஷதம் செய்யும் முறையும், பிரயோகிக்கும் விதமும் மாறுதலடைந்திருந்தாலும் குறிப்பிட்ட ஔஷதத்துக்குரிய பொருள்கள் மாறுபடுவதில்லை. ஆகையால், எல்லாத் தேசங்களிலும் எல்லா மருந்துகளும் சரியானபடி பிரயோகிக்கப்படுமானல் குறிப்பிட்ட வியாதிகளை நிவிருத்தி செய்து வருமென்பதில் ஸந்தேஹமில்லை. அகஸ்தியர், அச்வனீ தேவர்கள், தன்வந்திரி, திருமூலர், தேரையர், வஸிஷ்டர், பராசரர், சுகர் முதலிய அனேக ஸித்தர்களாலும், தேவர்களாலும், மஹர்ஷிகளாலும் இயற்றப்பட்ட வைத்திய நூல்கள் அளவில்லாமலிருக்கின்றன. ஆதிகாலம் தொடங்கி அவைகளின் ஸாராம்சங்களை நன்றாக அறிந்த சுதேச வைத்தியர்களால் செய்யப்படும் ஔஷதங்கள் வியாதிகளை நிவிருத்தி செய்வதில் சிறந்தவை யென்பதை அனைவரும் அனுபவத்தில் அறிந்திருக்கின்றனர்.

புண்ணியத்திற்கும் புகழுக்கும் ஆதாரமாயுள்ள இந்த வைத்தியமானது நமது தேசத்தில் வரவர க்ஷீணித்துக் கொண்டு வருகின்றது. நமது சுதேச வைத்தியர்களுக்குள் ஒற்றுமையிருந்தால் க்ஷீணிக்க வழியில்லை. அவரவர் வசத்திலுள்ள உயர்வான ஔஷதங்களைப் பிறரிடங் கொடுத்து பிரஸித்தப் படுத்திவைக்காமல் இரஹஸ்யப் படுத்துவதினாலும், ஔஷதங்களைப் பிறரிடத்தில் வாங்கி உபயோகப் படுத்துவதினால் தங்களை ஒன்றுந் தெரியாதவர்களென்று அயலார் அவமதிக்க நேரிடுமோவென்று அச்சப்படுவதாலும், மருந்துகளை செய்கிறவர்களும், விற்பவர்களும், வைத்தியம் செய்கிறவர்களும் தனித் தனியாய் பிரிவு பட்டில்லாமையாலும், நாளுக்கு நாள் நமது வைத்தியம் மலின மடைந்து வருகின்றது.

இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜர்மனி முதலிய தேசங்களில் ஔஷதங்களைச் செய்பவரும், விற்பவரும், பிரயோகிப்பவரும் வெவ்வேறா யிருக்கின்றார்கள். மருந்து முடிந்தவுடன் அளவையும் கிரயத்தையும் குறிப்பிட்டு, எல்லாவிடங்களிலும் விளம்பரம் செய்து விடுகிறார்கள். வேண்டியவர்கள் விலை கொடுத்து வாங்கி வியாபாரஞ் செய்தும், வைத்தியம் செய்தும் வருவதினால், மேற்படி அன்னிய நாட்டார்களின் வைத்தியமும், வியாபாரமும் பிரபல மடைந்து வருகின்றன.

ஆகையால் மேல் நாட்டார்களின் நடையையும் சில விஷயங்களிம் மட்டும் பின்பற்றி நமது வைத்தியர்களும் நடந்து வருவார்களாயின், நமது வைத்தியங்களுக் குண்டான குறைவும் நிவிருத்தியாகி, சிறிது காலத்திலேயே அபிவிருத்தி யடையலா மென்பது தற்காலத்தியவரின் கருத்து.

DISEASES FROM TIN AND LEAD VESSELS.

ஈயப்பாத்திரங்களால் ஸம்பவிக்கிற கொடிய வியாதிகள்.

BY

Mr. K, A. GOVINDARAJU VAIDYAR.

நாம் உண்ணும்போது உபயோகிப்பதற்காக அனேக விதமான பாத்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்றாகியது ஈயப்பாத்திரமேயாம்.

ஈயமானது (Fedarated Malay States, Nagarisimbilan, Pahang, Perak, Selangor) மலாய் நாடுகளான நகரிசிம்பிலான், பாகாங், பேரக், சிலாங்கூர் என்னும் பட்டணங்களிலும், அதன் உட்பிரிவுகளாகிய பூலோ அருங், சுங்கே ஊஜோங், ஜெலிபு, தீட்டி, கோலப்பிலா, ஈப்போ, ஜெலிபு, மோப்பின், பத்துகாஜா, தாப்பா, கம்பார், காசாங், கஞ்

…சிங், கோலகுப்பு, கோலாலம்பூர், …டுகளிலும் அதைச் சேர்ந்த இன் …க கிராமங்களிலும் உண்டாகின்றன. ஈயமானது பூமியின்மேலும், பூமியின் சொற்ப ஆழத்திலும், மலையருவிகளிலும், சுனையிலுமிருந்து ஏராளமாய் எடுக்கப்படுகின்றன. அது, பூமியிலிருந்து எடுக்கப்படும்பொழுது கொட்டைப்பாக்கு முதல் சிறு மணல் பிரமாணம்வரையிலுமுள்ள கறுமையான கனத்த ஒருவகை மணல் மாதிரியிருக்கும். அவ்வூர் வாசிகளான மலாய்க்காரர்களாலும், ஐரோப்பியர்களாலும், சீனர்களாலும், நமது இந்துக்களாலும் அவ்வூர்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற (Tin Mining Co.) ஈயச்சுரங்கக் கம்பெனிகள் அனேகம் உண்டு. மண் வெட்டு வேலைகளுக்காக, ஸாதாரண மணலையும், ஈயமணலையும் ஓடுகிற தண்ணீரில் கரைத்துப் பிரிப்பதற்கென்று இந்துக்களும், மலாய்க்காரர்களும், சீனர்களும் கூலிகளாக நியமிக்கப்படுகிறார்கள். அவ்வூர்களில் கவர்ன்மெண்டாரால் செய்யவேண்டிய வண்டிச்சாலைகள், இருப்புப்பாதைகள் முதலிய தி…ண்வெட்டு வேலைகளுக்காக இந்துக்கள் மேஸ்த்திரிகளாகவும், கூலிகளாகவும் ஏராளமாய் வந்து சேருகின்றார்கள். அவர்கள் நமது தேச வழக்கப்படி இரவில் நீர் சேர்த்து வைக்கும் குளிர்ந்த பழைய அன்னத்தை ஸாப்பிட்டு காலை மணி ஆறுக்கு வேலைக்குப் போய், களைத்து தாஹம் உண்டான நேரங்களில் மேற்கூறியுள்ள அருவிகளிலும், சுனையிலும் நீருந்துகிறார்கள். இவர்கள் ஈய அணுக்கள் படிந்திருந்த பழைய அன்னத்தை ஸாப்பிட்டு ஈயஸம்பந்தமான தண்ணீரையும் குடிப்பதினால், குடலில் ஈய அணுக்கள் கரைந்து, இரண்டொரு மாதங்களில் ஜீர்ணசக்தியும் குறைந்து, ஜ்வரம் உண்டாய், வயிற்றில் ஜ்வரக்கட்டி யேற்பட்டு (Spleen enlargement), வயிறு பெருத்து, மற்ற அவயவங்கள் சிறுத்து, தேஹம் வெளுத்து, பெருமூச்சுண்டாய், அவ்வூர்களிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்குப் போகப் பயந்து, வியாதியுடன் வேலைக்குப் போய், மேற்கூறியவாறே அந்நிலைமைகளிலும் அதே அன்ன பானாதிகளை யருந்தி வருவதினால், வரவர வியாதி முதிர்ந்து, கடைசி காலத்தில் ஆஸ்பத்திரி போய்ச் சேர்ந்து, சொற்பநாட்களுக்குள் உயிர் நீங்கி, அந்த ஊர்மண்ணுக்கே பலர் இரையாகின்றனர்; அனேகம் இந்துக்களை நான் நேரில் இந்நிலைமையில் பார்த்திருக்கிறேன். இன்னும் அந்த ஊர்களில் நமது தேச வழக்கப்படி பூமியில்பாய் விரித்து உறங்குபவர்களுக்கு (Beri-Beri) பெரி - பெரி என்னும் ஓர் வகையான விஷ வாதரோகம் உண்டாகின்றது. இந்த ஊரில் பழையது ஸாப்பிட்டாலும், பச்சைத்தண்ணீர் குடித்தாலும், காய்ச்சல் உண்டாய் வயிற்றில் கட்டி உண்டாகும். 'அவன் அப்படித்தான் இறந்தான்; இவனும் இப்படித்தான் இறந்தான்; தண்ணி ஈயத் தண்ணியல்லவா?' என்று இந்து ஜனங்கள் பேசிக்கொண்டாலும், பின் வருமாறு செய்துகொள்ள எவ்வகையிலும் சக்தியற்றவர்களாயிருக்கின்றார்கள்.

அவ்வூர்களிலுள்ள துரைமார்களும், உத்தியோகஸ்தர்களும், தக்க நிலைமையிலுள்ள தனவான்களும் முதலில் தண்ணீரை நன்றாகக் கொதிக்க வைத்து சிறிது நேரம் வரையில் வைத்திருந்து, வடிகட்டி, சமையலுக்கும் தாஹத்திற்கும் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இவர்கள் வெளியே போக நேர்ந்த காலங்களில், அவ்வூர்களிலுள்ள எல்லாக்கடைகளிலும் விற்கிற சோடா, லிமனெட், பீர் முதலியவைகளால் தாஹசாந்தி செய்துகொள்ளுகிறார்களாகையால், மேற்கூறிய வியாதிகளினின்றும் தப்பித்துக்கொள்ளுகிறார்கள். மேற்கூறிய வியாதிகள் (Strait Settlement) சிங்கப்பூர், பினங்கு முதலிய தீவுகளில் உண்டா

கிறதில்லை. ஏனெனில் அங்கே ஈய உற்பத்தி கிடையாது.

ஈய அணுக்கள் படிந்திருந்த பழைய அன்னத்தை ஸாப்பிட்டு, ஈய ஸம்பந்தமான தண்ணீரையும் உட்கொண்டவர்களின் கதி இப்படியிருக்குமானால், தனியாகவே கட்டி ஈயத்தை பிரதிதினமும் ஆஹாரத்துடன் உறைத்து ஸாப்பிட்டுவருகிற ஜனங்களின் கதி என்ன?

ஈயம் பூசாத செம்பு, பித்தளை முதலிய பாத்திரங்களில் உப்பு புளி முதலியவைகள் ஸம்பந்தப்பட்ட குழம்புகள், கறிகள், தயிர் முதலியவைகளைச் சிறிது நேரம் வரையில் வைத்திருந்து ஸாப்பிட்டால், களிம்பு என்னும் ஓர் வகையான விஷச்சுவையுண்டாய் வாந்தி பண்ணுகிறோமல்லவா?

மேற்கூறிய லோஹங்களின் ஸத்தானது, குழம்பு, கறி, தயிர் முதலியவைகளில் ஸம்பந்தப்படாமல் எப்படி விஷச்சுவை ஏற்படும்? ஈயத்தை விட பத்துமடங்கு அழுத்தமுள்ள மேற்கூறிய லோஹங்களே உப்பு, புளி முதலிய வஸ்த்துக்களால் கரையுமானால், மிருதுவான ஈயம் ஏன் கரைந்து உட்செல்லாது?

தங்க நகைகளையும், நாணயங்களையும் ஈயம் பூசிய பாத்திரத்திலாவது, ஈயப்பாத்திரத்திலாவது வைத்திருந்தால், சிறிது நாட்களில் அதன் நிறம், குணம், ஒளி முதலியவைகள் மாறுபாடடைகின்றன. ஈயமானது நமது தேஹத்திற்குள் சன்னம் சன்னமாய் குடியேறி, குடலில் படிந்து, பிறகு எங்கும் வியாபித்து, தேஹத்தைப் பல வழியிலும் கெடுத்து, மருந்துகளால் நிவிருத்திக்க முடியாத வியாதிகளை உண்டாக்கி விடுகிறது.

செம்பு, பித்தளை முதலிய லோஹங்களில் உப்பு, புளி என்னும் வஸ்த்துக்கள் ஸம்பந்தப்பட்டு உண்டாகிற களிம்பு என்னும் விஷச்சுவையானது, நமது நாவில் பட்டதும் அது அச்சுவையை ஏற்றுக்கொள்ளாமல் தடுத்து விடுகின்றது. அந்த பாத்திரங்களில் சமைத்த உணவானது, நறுமணமுள்ள கறி குழம்பு முதலியவைகளின் ஸம்பந்தத்தால், குடலுக்குள் சென்றாலும், பின்னர் சிலருக்கு ஏற்றுக்கொள்ளாமல் வயிற்றுப் பொருமலுடன் பேதியாகக் கழிந்து விடுகின்றது. ஈயமானது, உப்பு, புளி முதலியவைகளின் ஸம்பந்தத்தினால் உரைந்து கரைந்திருந்தும், நாவிற்கு யாதொரு அருவருப்புங் காட்டாது, எல்லா விஷயத்திலும் மிக்க நலம்போல் நடித்து, உடலுக்குள் பிரவேசித்து அனேக கொடிய நோய்களை விளைவித்துவிடுகின்றது.

மண்பாத்திரம், பித்தளைப்பாத்திரம் முதலிய எந்தப் பாத்திரத்திலும் இரத்தத்திற்கு வேண்டிய முக்கிய பதார்த்தமாகிய பாலை எவ்வளவு நேரம் காய்ச்சினாலும், அதன் நிறம், குணம், சுவை முதலியவைகள் சிறிதும் குன்றாது நல்லுணவாகின்றது. ஈயம் பூசிய பாத்திரத்திலாவது, தனி ஈயப்பாத்திரத்திலாவது பாலை சிறிதுநேரம் காய்ச்சினால், அது சீக்கிரத்தில் முறிந்து மேற்கூறிய எல்லாவகைகளிலும் கெட்டுப்போகின்றதென்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. இரத்தத்திற்கு ஸத்து போன்ற பால் இப்படி முறிந்து கெட்டுப்போனால், தனி இரத்தம் முறிந்து கெட்டுப்போவதில் என்ன ஸந்தேஹமிருக்கின்றது? புளி, ஈயம் இரண்டும் சரீரத்தில் ஊறினால் தாதுக்களையெல்லாம் கெடுத்து வாதரோகங்களை உண்டாக்கும்.

நமது சுதேச வைத்தியர்கள் ஈயத்தைக் காரஸாரமுள்ள ஜயநீர்களாலும், பச்சிலை வர்க்கங்களாலும், உப்பின் இனங்களாலும் சுண்ணமாவது பஸ்மமாவது செய்து முடித்துப் பரீக்ஷிக்கையில், கைபாகம், செய்பாகம், தீக்ஷா பாகம் முதலியவைகளில் சிறிது தவறி விதிப்படி முடியாமல் ஈயச்சத்துகள் தங்கிகின்றால், அவற்றை உள்ளுக்குக் கொடுக்கப் பயந்தவர்

களாய், "வங்கம் கெட்டால் பங்கம்—முடிந்தால் தங்கம்" என்று சொல்லி, சரியானபடி பக்குவமாகாத வங்கத்தை உபயோகிக்காமல் நிறுத்திவிடுகிறார்கள். மேற்கூறியபடி செய்து, கொஞ்சம் துர்க்குணம் நீங்கிய ஈயச்சாம்பலையே உள்ளுக்குக் கொடுக்கப் பயந்த உத்தம வைத்தியர்கள், முழு ஈயத்தை ஆஹாரத்துடன் பிரதி தினமும் கரைத்து ஸாப்பிட ஏன் இடங்கொடுக்கின்றார்கள்!

கொடிய விஷமுள்ள ஸர்ப்பத்திற்கு நல்ல பாம்பு என்று பெயர் வழங்கி வருவது போல, விஷப்பாத்திரமாகிய ஈயப்பாத்திரத்தை ஸத்பாத்திரமாகவும், விஷச்சுவையான புளி என்னும் வஸ்துவை நற்சுவையாகவும் பாவித்து வருகின்றார்கள். 'உற்றுப் பார்த்தால் உண்மை விளங்கும்' என்னும் வாக்கியத்தை என்றும் மறவாதவர்களாய், நாம் உண்ணும் உணவுகள் ஒவ்வொன்றையும், அதற்காக நியமிக்கும் பாத்திரங்களையும், நமது புத்திக்கு எட்டிய வரையில் தீர விசாரித்து உபயோகித்து வருவோமானால், அறியாமையால் நேரிடுகிற பற்பல வியாதிகளினின்றும் தப்பித்துக் கொள்ள ஹேதுவாக இருக்கும். 'தீனியறிந்து தின்பாராகில் பிணியே இல்லை' யென்று நமது மூதாதைகளின் நூல்கள் முறையிடுகின்றன.

புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிற மஹாமஹிமை தங்கிய (Radium) ரேடியம் என்னும் பிரகாசமுள்ள ஒரு வகையான விலையுயர்ந்த வயிரக்கல்லை எவ்வகையிலும் அழுத்தமாய்க் கட்டப்பட்ட இருள் நிறைந்த அறையிலாவது, இரும்பு முதலிய பளுவுள்ள லோஹங்களினால் செய்யப்பட்ட பெட்டியிலாவது, பாத்திரங்களிலாவது வைத்தால், அது ஒன்றையும் பொருள் படுத்தாது தன்னுடைய முழுப் பிரகாசத்தையும் வெளியே காட்டுகிறதாகவும், ஈயப்பாத்திரத்திலாவது, ஈயப் பெட்டியிலாவது வைத்தால், அதன் பிரகாசமானது கொஞ்சங்கூட வெளியே செல்லச் சக்தியற்று இருளடைந்து விடுகிறதாகவும் கேள்விப் படுகிறேன். கல்லின் பிரகாசமே இந்த கதியானால்; ஆத்மா வென்னும் உயிரின் பிரகாசம் என்ன கதியடையுமென்பதை அறிஞர்களே அறியட்டும்.

மேற்கூறியபடி ஈயத்தை விசேஷமாய் பல வழிகளிலும் உபயோகிப்பவர் நூற்றிற்குத் தொண்ணூற்றைந்துபேர் பிராமணர்களேயாம்.

கும்பகோணம் கடைத்தெருவில் ஈயப்பாத்திரங்கள் விற்கிற கடைகளில் தெய்வத்தன்மை வாய்ந்த பிராம்மண புண்ணிய புருஷோத்தமர்களும், அவர்களுடைய ஸ்திரீகளும் தங்களிடத்தில் எவ்வளவு விலையுயர்ந்த ஸ்வர்ணபாத்திரங்கள், வெள்ளிப்பாத்திரங்களிருந்தாலும், விலையில் குறைந்து குணத்தில் மிகுந்து யாதொரு குற்றமுமில்லாத மண் பாத்திரங்கள், பீங்கான் பாத்திரங்கள், கண்ணாடிப் பாத்திரங்களிருந்தாலும், அவற்றைப் பாத்திரங்களாக நினையாமல், பார்வைக்கு வெள்ளியைப்போல் பளபளப்பாயும், உயிருக்கு யமனாயும் இருக்கும் ஈயப்பாத்திரங்களை, சனியனை விலைக்கு வாங்குவதாக நினையாமல், சுமார் ஒரு மணு முதல் அரைப் பலம் வரையிலுமுள்ள பற்பல வகையான பாத்திரங்களை அடங்கா மகிழ்ச்சியுடன் விலைகொடுத்துவாங்கிக்கொண்டு "இதில் தயிர் வாங்கலாம், இதில் நீர்மோர் கரைத்து புருஷாளுக்குக் கொடுக்கலாம், இதில் குழம்பு காய் கறிகள் வைக்கலாம், இதில் இரஸம் கொதிப்பிக்கலாம், இந்த பெரிய பாத்திரங்களில நமது வீட்டில் உண்டாகிற கலியாணம் காட்சிகளுக்கு ஏராளமான தயிரைச் சேகரித்து வைக்கலாம், இதில் தாஹத்திற்கு நீர்மோர் கரைத்து செலவிடலாம்" என்றும், "இன்னொரு தடவை கும்பகோணம் வந்தால் நாம் வாங்கிய கடையில் சுமார் கலத்தயிர் கொள்ளும்படியான பெரிய பாத்திரமிருக்கிறதே! அதைக் கட்டாயம் வாங்கிக்கொண்டு போகவேண்டும்" என்றும், ஸம்பாஷித்துக்கொண்டு போவதைக் காணலாம்.

மேற்கூறியுள்ள ஒவ்வொரு விஷயங்களையும் படித்தறியும் பண்டிதர்களும், மற்றவர்களும் பொறுமையுடன் ஈயத்தின துர்க்குணம் யாவையுப தீர விசாரித்துபரிசோதித்தால் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விஷயம் பிரத்யக்ஷமாய் விளங்குமென்பது நிச்சயம். என் புத்திக்கும், அநுபவத்திற்கும் எட்டியவரையில் எழுதினேன். இதைப் போன்ற இன்னும் ஏதாவது கெடுதிகள் ஈயத்திற்கு உண்டாயிருக்குமானால், அவற்றை இப்பத்திரிகையின் மூலமாய் எழுதினால் ஜனங்களுக்கு நன்மையுண்டாகும்.

வைத்திய கலாநிதி.

ப்ரமாதீச ஸ்ரீ கார்த்திகைமீ.

A BILL FOR THE REGISTRATION OF AYURVEDIC AND UNANI MEDICAL PRACTITIONERS.

ஆயுர்வேத யூனானி வைத்தியர்களைப் பதிவு செய்வதற்காக மஸோதா அவசியம்.

ஆனரபில் டாக்டர் நாயர் சென்னை சட்ட நிரூபண ஸபையில் வைத்தியர்களைப் பதிவு செய்வதற்காக 1913-ம் ஸ்ரீ நவம்பர்மீ 11உயில் ஒரு மஸோதா பிரேரித்து, அது இப்பொழுது ஸெலெக்ட் கமிட்டியின் யோசனைக்கு விடப்பட்டிருக்கிறதல்லவா? இந்த மஸோதாவைப் பற்றி இந்தியாவிலுள்ள பொது ஜனங்களின் அபிப்பிராயங்கள் பலவிதமாயிருக்கின்றன.

இந்த மஸோதா அவசியமென்பதற்கு ஆனரபில் டாக்டர் நாயர் சொல்லுகிற காரணம் மூன்று:—

(1) வைத்தியப் பயிற்சி பெறுபவருக்கு தற்காலத்தில் இருப்பதைவிட பொதுப்படிப்பும் வைத்திய சாஸ்திர அப்பியாஸமும் இன்னும் அதிகமாய் விருத்தியாக வேண்டுமென்பது.

(2) யோக்கியதை யில்லாதவர் வைத்தியம் செய்வதைத் தடுப்பதற்கும், யோக்கியதையுள்ள வைத்தியர்கள் இன்னாரென்று தெரிந்துகொள்வதற்கும் பிரமாணமாகக் கொள்ளக்கூடிய ஒரு பதிவுப் புஸ்தகம் (Register) ஏற்படுத்துவது.

(3) தேர்ச்சி பெற்று தொழில் நடத்தும் வைத்தியர்களை நியாயமான சில நிபந்தனைகளுக்கு உட்படுத்துவது.

1-வது காரணம்:—இப்பொழுது சென்னை மெடிகல் காலேஜில் படித்துவரும் மாணாக்கருக்கு ஏற்கனவே பொதுப் படிப்பில் தகுந்த யோக்கியதை இருப்பதாகவும், அவர்களுடைய யோக்கியதையை விருத்திபண்ணுவது இப்பொழுது முக்கியமல்ல வென்றும், ஆனால் பொதுப்படிப்பிலும் சாஸ்திரப் படிப்பிலும் தகுந்த யோக்கியதை யில்லாமலே கல்கத்தா முதலிய இடங்களில் சில காலேஜுகளில் படித்து, ஈஸ்டு கோஸ்டு ரெயில்வே மூலமாய் சிலர் வந்து விடுவார்களென்று அஞ்ச வேண்டியிருப்பதால் இந்த மஸோதா அவசியமென்றும் டாக்டர் நாயரே சொல்லுகிறார். ஈஸ்டு கோஸ்டு ரெயில்வே வழியாய் சிலர் வருவதற்குப் பயந்து ஒரு பெரிய மஸோதாவைப் பிரேரிப்பது நியாயமா?

2-வது காரணம்:—இப்பொழுது பிரேரணை செய்யப்பட்டிருக்கும் விதமாக மஸோதாவில் இங்கிலீஷ் டாக்டர்களே பதிவு செய்யக்கூடியவர்களென்றும், ஆயுர்வேத யூனானி டாக்டர்கள் சேர்க்கப்பட மாட்டார்களெனவும் சொல்லப்படுகிறது. இப்பொழுது மேல் நாட்டு வைத்திய முறையைக் கற்றுத் தேறிய வைத்தியர்களில் யோக்கியதையுள்ளவர் யோக்கியதையற்றவர் என்கிற பேதத்தை யறிவிக்க, கற்றுத் தேறிய வைத்தியர்களுடைய L. M. S. முதலிய பட்டங்களும், அவர்களிடமுள்ள ஸர்ட்டிபிகேட்டுகள் அல்லது அதிகாரப் பத்திரங்களும் (Diploma), யூனிவெர்ஸிடி காலெண்டர் லிஸ்டுகளும், ஸிவில் மெடிகல் லிஸ்டு முதலியவைகளுமே போதுமானதாயிருக்க, பிரத்தியேகமாய் அவர்களுக்கென்று மறுபடியும் ஒரு ரெஜிஸ்டர் ஏற்படுத்துவது அனாவசியமும் வீண் செலவிற்குக் காரணமுமாகிறதல்லவா? இதுவரையில் ஜனங்கள் நாற்றுக்

ணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் வைத்தி யர்களுடைய யோக்கியதையை அறியமுடியா மல் மோசம் போயிருப்பதுபோல் இந்த மஸோதா சட்டமாக ஏற்பட்டபின் மோசம் போக நேரிடாதென்றும் அவர் சொல்லுகிறார். அவர் அவ்விதம் சொல்லுவதற்குத் தகுந்த ஆகாந்தரம் ஒன்றுங் காணவில்லை. ஏனெ னில், ஏற்கனவே வைத்தியர்களில் தேர்ச்சி பெற்றவர்களையும் தேர்ச்சி பெறாதவர்களையும் அறிவதற்கு, முற்கூறிய விதம் தேர்ச்சிபெற்ற வர்களுக்குரிய பட்டம் முதலியவைகளே போதுமான அடையாளங்களா யிருப்பதால், ஜனங்கள் தாம் சிகித்ஸை செய்து கொள்ளும் வைத்தியர்களுடைய யோக்கியதைகளைப் பகுத் தறிந்தே நடந்து வருகிறார்களென்று நிச்சய மாய்ச் சொல்லலாம்.

3-வது காரணம்:—தேர்ச்சியடைந்த வைத் தியர்களின் தொகை அதிகமாய் விட்டால், அவ்விதம் கற்றறிந்த வைத்தியர்களும் ஜீவனத் தின் பொருட்டுச் சில அற்பவழிகளில் தொ ழில் நடத்தும்படி பிரவ்ருத்திக்கக் கூடுமாகை யால், அவ்விதம் நேரிடாமலிருப்பதற்கு அவ் வைத்தியர்களை ஒருவித நிபந்தனைக்கு உட்படு த்துவது அவசியமென்று அவர் சொல்லுகிறார். ஆயுர்வேத யூனானிவைத்தியர்கள் தேசத்தில் ஜனங்களுக்கு நன்மை செய்யக் கூடியவர்களா யிருந்தால், அவர்களுக்குப் படிப்புக்குத் தகுந் தவாறு ஸர்ட்டிபிகேட்டுகள் கொடுத்து யோக் கியத்தையை உண்டு பண்ணிக்கொள்ளலாம் என் றும், அவ்விதம் நடக்காத வரையில் அவர்களை இந்த ரெஜிஸ்டரில் சேர்ப்பது தகாதென்றும் கூறுகிறார். டாக்டர் நாயர் இப்பொழுது தூங் கிக்கொண்டிருக்கும் சுதேச வைத்தியர்களைத் தட்டி எழுப்புவதாகக்கருதி, அவ்விதமே சுதே ச வைத்தியர்களும் பொதுஜனங்களும் சேர்ந் து, சுதேசவைத்தியர்களின் பொருட்டும் இவ் விதமாய் ஒரு ரெஜிஸ்டர் ஏற்படுத்தவேண்டு

மென்று கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள் வது கடமையாகும். இங்கிலீஷ் டாக்டர்கள் தமக்குச் செல்வாக்கிருப்பதால், கவர்ன்மெண் டாரிடம் இவ்விதம் அநேக சுதந்திரங்களைக் கேட்டு அவர்களுடைய இஷ்டப்படி அந்த பாத்தியதைகளையும் அடைந்து வருகிறார்கள். அதே மாதிரி சுதேச வைத்தியர்களும் கவர்ன் மெண்டாரைக் கேட்டுக்கொள்வதற்கு பாத்தி யதையற்றவர்களாக இல்லை. நமக்கு வேண் டிய விஷயங்களை கவர்ன்மெண்டாரிடம் அறி வித்து முறையிட்டுக் கொள்ளாதவரையில் நமக்கு ஸ்வாதந்த்ரியங்களும் நன்மைகளும் கிடைக்காதென்பது நிச்சயம்.

சென்ற ஸென்ஸஸ் கணக்கின் பிரகாரம் இந்த மாகாணத்தில் 31,000 வைத்தியர்கள் இருப்பதாய் அறியப்படுகிறது. அதில் சுமார் 1000-வைத்தியர்கள் இங்கிலீஷ் வைத்தியத் தில் படித்துத் தேறியவராவார்கள். மிகுந் துள்ள 30,000 வைத்தியர்களும் ஆயுர்வேத யூனானி முதலிய சுதேச முறைப்படி பல வழி களில் வைத்தியம் செய்து வருகிறார்கள். இந்த 30,000 வைத்தியர்களை விலக்கி விட்டு, சுமார் 1000-வைத்தியர்கள் தம்முடைய நன்மையை மட்டும் கோரி ஒரு ரெஜிஸ்டர் ஏற்படுத்திக் கொள்ளப் பிரவ்ருத்திக்குங்கால், 30,000 வை த்தியர்கள் சும்மா யிருப்பது அவர்களுக்குள்ள ஒற்றுமையின்மையையும், அபிவிருத்திக்கு வர வேண்டிய வழிகளில் முயற்சியற்ற சுபாவத் தையும் அறிவிக்கிறது. நன்றாகக் கவனிப் போமானல் 30,000 பேர் அடங்கிய இந்த சுதேச வைத்தியர்களுக்குதான் முதன் முதலில் ஒரு ரெஜிஸ்டர் ஏற்படுத்துவது மிக வும் அவசியமென்று சொல்லவேண்டும். 30,000 வைத்தியர்களில் திறமையுள்ள வைத் தியர்களைப் பொறுக்கி யெடுத்து அவர்க ளுடைய பெயரையெல்லாம் இப்பொழுது ஒருவாறு ரெஜிஸ்டர்செய்து விட்டால், பிறகு

புதிதாக ஒருவர் வைத்தியத்தொழில் செய்ய விரும்புவாரானல், அவரை ஏதாவது ஒரு சுதேச வைத்திய ஸ்தாபனத்தில் படித்து வைத்தியத்தில் அப்பியாஸம்பெற்று, ஸர்ட்டிபிகேட் முதலியதை அடைந்த பிறகு, அவர்களும் வைத்தியம் செய்யக்கூடும் என்ற நிபந்தனையை வேண்டுமானல் ஏற்படுத்திவிடலாம். அப்படியானல் சுதேச வைத்தியத்தொழில் செய்பவர்களுக்கு நல்ல அறிவும், ஜனங்களுக்கு நன்மையும் நேரிடும். முதலில் இவ்வளவு சுதேச வைத்தியர்களில் திறமையுள்ளவர் இன்னரென்று பொறுக்குவது சிறிது பிரயாஸமாகத்தானிருக்கும். ஆகிலும், ஒருமுறை பிரயாஸப்பட்டு இவ்வித ஏற்பாடு ஒன்று செய்துவிட்டால், பிறகு, புதிய வைத்தியர்களை ரெஜிஸ்டர் செய்யும்பொழுது ஒருவித கஷ்டமும் நேரிடாது.

சுதேச வைத்திய முறைகளை சாஸ்திர ரீதியாக அப்பியஸித்து, பதார்த்தங்களுடையவும், தேஹக்கூறுபாடுகளுடையவும் தத்துவங்களை நன்குணர்ந்து வைத்தியத்தொழில் நடத்துவதில் டாக்டர் நாயர் ஆக்ஷேபம் சொல்லவில்லை. ஆனல், இங்கிலீஷ் வைத்தியர்களுக்கு கவர்ன்மெண்டார் ஸஹாயம் செய்து அவர்களை உத்ஸாஹப்படுத்துவது போல் இப்பொழுதுள்ள ஆயுர்வேத பாடசாலை, வைத்தியசாலை இவைகளையும், ஆயுர்வேத யூனனி வைத்தியர்களையும் சிறிதேனும் கவர்ன்மெண்டார் ஆதரிப்பாரானல், ஆனரபில் டாக்டர் சொல்லுகிற விதம் சுதேச வைத்தியர்களும், தமது ஞானபிவ்ருத்தியைத் தேடிக் கொள்வரென்பது நிச்சயம். இப்பொழுது, ஜனங்களும், சுதேச வைத்தியர்களும் பலவழிகளிலும் அவ்வித ஸஹாயத்திற்காக கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ள வேண்டும். ஆயுர்வேத யூனனி வைத்திய முறைகளின்படி வைத்திய சாலைகள் அல்லது ஔஷதசாலைகள் வைத்து நன்றாக நடத்தப்படுமானல், கவர்ன்மெண்டாரிடமிருந்தும், முனிஸிபாலிடி முதலியவைகளிடமிருந்தும் திரவிய ஸஹாயம் கிடைக்குமென்று இந்த மஸோதா குறிப்பிடுவதால், ஆங்காங்குள்ள சுதேச வைத்தியர்களைக்கொண்டு ஜனங்கள் தகுந்தவாறு ஔஷதசாலைகளை ஏற்படுத்தி, அவற்றை நன்றாக நடத்திவந்து தமது வைத்தியசாலைகளைப்பற்றிய ரிபோர்ட்டுகளை அப்போதைக்கப்போது கவர்ன்மெண்டாருக்கும், முனிஸிபாலிடியாருக்கும், மற்றும் தாலூக்போர்ட்டு முதலியவற்றிற்கும் அறிவித்து, கிராண்டு முதலியவை தமது வைத்தியசாலைகளுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளலாம். இப்பொழுது, சென்னையில் ஸ்ரீகன்னிகாபரமேச்வரீ ஆயுர்வேத தர்ம வைத்தியசாலைக்கு சென்னை முனிஸிபாலிடியார் வருஷத்திற்கு 500 ரூபாயாக, இரண்டு வருஷகாலமாய் கிராண்டு கொடுத்துவருகிறார்கள். மைலாப்பூரில் ஆனரபில் மிஸ்டர் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட வெங்கடரமண ஆயுர்வேத வைத்திய சாலைக்கும் வருஷத்தில் 100 ரூபாய் முனிஸிபாலிடியாரிடமிருந்து கிராண்டு வருகிறது.

ஆனரபில் ஸர் ஜான் அட்கின்ஸன் இந்த விஷயத்தைப்பற்றி முதலில் தடஸ்தராயிருந்ததாகவும், பிறகு பத்திரிகைகளில் வந்த விஷயத்தைக் கவனித்ததாலும், இந்த மஸோதாவில் கண்டிருக்கும் அம்சங்களையெல்லாம் நன்றாகக் கவனித்ததாலும், இந்த மஸோதா அவசியமென்றே தாம் நினைப்பதாகக் கூறியது சரியே. ஆனல் ஸபையிலிருந்த மற்ற கவர்ன்மெண்டு தரப்பு மெம்பர்களையும் இவ்விஷயத்தில் அநுகூலமாகவே அவசியம் அபிப்பிராயம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டது சரியா என்பதுதான் யோசிக்க வேண்டிய விஷயம்.

ஆனரபில் ஜைனுலாபுடீன் ஸாயபு அவர்கள்

சொன்னதாவது:—"இந்நாட்டு வைத்தியர்கள், தலைமுறை தலைமுறையாக அநுபவம் பெற்றுவந்திருக்க, அவர்களை யோக்கியதை யற்றவர்களென்று சொல்வது சரியல்ல. ஸர்டிபிகேட்டுகளில் கையெழுத்திட யோக்கியதை அவர்களுக்கில்லை யென்று சொல்வதும், அவசியமான ஸமயங்களில் கோர்ட்டு முதலான இடங்களுக்கு அழைக்கப்படும் பொழுது ஜூரர்களாகப் போக நேரிடுமென்று சொல்வதும் சரியல்ல."

ஆனரபில் ஸர்ஜன் ஜெனரல் பானர்மன் அவர்கள், "கிரேட் பிரிடன், அயர்லண்டு இவைகளுக்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஜெனரல் மெடிகல் கௌன்ஸில் என்கிற ஸபையாரால் அங்கீகரிக்கப்பட்ட முறைகளின்படி வைத்தியம் செய்பவரே இந்த ரெஜிஸ்டரில் பதிவு செய்து கொள்ளக்கூடியவராவர் என்று வியக்தமாகச் சொல்லிவிட்டால், இவ்வளவு எதிர்வாதங்களுக்கும் இடமிராது" என்று கூறினார். இவர் சொன்னது, நமது சுதேச வைத்தியர்கள் அனைவரும் சேர்ந்து தம்மை ரெஜிஸ்டர் செய்து கொள்ளப் பிரத்தியேகமாக ஒரு மஸோதா கொண்டுபோவதற்குக் காரணமா யிருக்கிறது.

ஆனரபில் ஏ.எஸ். கிருஷ்ணராவ் அவர்கள், இதற்கு மறுநாள், கிராமாந்தரங்களிலுள்ள ஜனங்களுக்கு வைத்திய உதவி கிடைக்கக் கூடிய உபாயங்கள் செய்வதற்கு ஒரு பிரேரணை கொண்டுவந்தார். முக்கியமாய் கிராமாந்தரங்களில் ஔஷதசாலைகள் வைத்து நடத்துவதற்கு லோகல் போர்ட்டு, முனிஸிபாலிடிகளுக்கு இப்பொழுது கொடுப்பதை விட அதிகமாகக் கிராண்டுகள் கொடுக்கவேண்டுமென்றும், இடம் விட்டு இடம் போகக்கூடிய வைத்தியசாலைகளை ஆங்காங்கு ஏற்படுத்த வேண்டுமென்றும், ஆயுர்வேத யூனானி வைத்திய முறைகளை விருத்தி செய்வதற்கு உதவி செய்யவேண்டுமென்றும், மற்றும் பல வழிகளில் ஜனங்களுக்கு நன்மை செய்யுமாறு வைத்தியத்தை விசாலப்படுத்த வேண்டுமென்றும் சொன்னார். பின்னும் தமது பிரேரணையை நிலை நிறுத்த, அவர் சொன்னதாவது:—சென்ற ஸென்ஸஸ் கணக்கின்படி 20,000 ஜனங்களுக்கு மேற்பட்ட 581-பட்டணங்களும், 5000-க்கு மேற்பட்ட ஜனத்தொகை யுள்ள 54,042 கிராமங்களும் உண்டு. 1000-க்கு மேல் 5000-க்கு உட்பட்ட ஜனத்தொகையுள்ள 22,097 கிராமங்களிலேதான் 100-க்கு 70 ஜனங்கள் விதம் வஸித்துவருகிறார்கள். இதற்காக 518 ஔஷதசாலைகளும் வைத்தியசாலைகளும் இருக்கின்றன. இவற்றுள் சென்னைப் பட்டணத்திலேயே இருப்பவை 14 வைத்தியசாலைகள். நாட்டுப்புறங்களில் லோகல்போர்ட்டாரால் நடத்தப்படும் வைத்தியசாலைகளில் 380, அல்லது 340 - சதுரமைலுக்கு ஒன்று விதம் ஏற்பட்டிருக்கிறது. சென்னப்பட்டணத்திலுள்ள 14 வைத்தியசாலைகளுக்குமாத்திரம் 10,56,348 ரூபாயும், வெளியிலுள்ள மற்ற 504 வைத்தியசாலைகளுக்கும் சேர்ந்து 16,91,699 ரூபாயும் செலவாயிருக்கிறது. இதில், சென்னைக்குமட்டும் கவர்ன்மெண்டார் உதவி செய்த ரூபாய் 8,13,220. வெளியூர்களுக்கு 1,46,620 ரூபாய் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்படுவது. இப்பொழுது லோகல் போர்ட்டார் 14,42,000 ரூபாய் செலவிடுகிறார்கள். அவர்களால் அதற்குமேல் செலவிட முடியாது. ஆகையால், வைத்திய உதவியை விசாலப்படுத்தவேண்டி கவர்ன்மெண்டாரே இப்பொழுது செய்வதை விட அதிகமாகப் பண உதவி செய்யவேண்டியிருக்கிறது.

ஆனரபில் கிருஷ்ணராவ் முதலில் சொன்னவற்றில் மூன்று விஷயங்கள் கவனிக்கப்படாவிட்டாலும் பாதகமில்லை; ஆயுர்வேத யூனானி

வைத்தியங்களை ஒருவாறு ஒழுங்குபடுத்தி, அவ்வைத்திய முறைகளைக்கொண்டே ஜனங்களுக்கு விசேஷமாக வைத்திய ஸஹாயம் கிடைக்குமாறு செய்வது மிகவும் இன்றியமையாத விஷயம். ஆயுர்வேத முறையானது தகுந்த சாஸ்திரரீதியாய் ஏற்பட்டதல்லவென்று இதுவரையில் ஒருவரும் சொல்லவில்லை, இனி சொல்லவும் முடியாது என்று மிஸ்டர் கிருஷ்ணராவ் சொன்னது இந்தியர்களால் மிகவும் கொண்டாடப் படுகிறது. அவர், இந்த ஆயுர்வேத முறைப்படி வைத்தியம் செய்வதால் அதிக பணச் செலவில்லையென்று சொல்வதும் வாஸ்தவம். இது வரையிலும் கவர்ன்மெண்டார் சுதேச வைத்தியங்களை அபிவிருத்தி செய்து, அவற்றின் மூலமாய் ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று பிரவிருத்திக்க வில்லை. ஆயுர்வேத முறையை எவ்விதத்திலும் அபிவிருத்தி செய்யவேண்டுமென்று ஆனரபில் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கவர்ன்மெண்டாருடைய ஸஹாயமின்றி இதை அபிவிருத்தி செய்வதும் முடியாது.

பிறகு, 6,000,000 ஜனங்கள் இந்த மாகாணத்தில் ஆஸ்பத்திரிகளில் சிகித்ஸை செய்யப்பட்டு வருகிறார்கள் என்றும், மிகுந்துள்ள ஜனங்களெல்லாம் சுதேச வைத்தியர்களையே நம்பியிருக்கிறார்களென்றும், இந்த சுதேச வைத்தியமுறைகள் இத்தேசத்திய ஜனங்களுடன் கூடவே வளர்ந்துவந்து ஜனங்களுக்கு அம்முறைகளில் நம்பிக்கை மேலிட்டிருக்கிறதென்றும், ஆகவே, சுதேசவைத்திய முறைகளையும், ஜனங்களுக்கு வைத்திய உதவி கிடைப்பதையும் விருத்தி செய்யவேண்டுமென்றும் சொல்லி, மிஸ்டர் ஜெய்னுலாபுடீன் மிஸ்டர் கிருஷ்ணராவ் அவர்களுடைய பிரேரணையை ஆதரித்தார். பிறகு ஆனரபில் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் கவர்ன்மெண்டு பக்கத்தில் பேசியதாவது:- "இது விஷயம் அவசியமே. ஆனால் இவ்விஷயம் கவர்ன்மெண்டாரால் ஆலோசிக்கப்படவில்லையென்பதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. இப்பொழுது இவ்வித காரியத்தில் செலவிடுவதற்கு வேண்டிய திரவியம் கவர்ன்மெண்டாரிடம் கிடையாது. ஆனாலும், இவ்வருஷத்தில் புதிதாக எட்டு இடங்களில் எட்டு ஒளஷதசாலைகள் ஏற்படுத்துவதாய் கவர்ன்மெண்டார் யோசித்திருக்கிறார்கள். லோகல் போர்ட்டுகளுக்கும், முனிஸிபாலிடிகளுக்கும் 1908-1909-ல் 56,000 ரூபாய் உதவி செய்திருக்கிறது. 1913-14-வது வருஷங்களில் 6,19,611 ரூபாயாக அதிகமாய் செலவிடப்பட்டிருக்கிறது. முனிஸிபாலிடிகளுக்கு செய்த திரவியஸஹாயத்தில் 1909-10-ம் வருஷத்தில், 19,000 ரூபாயாக இருந்தது 1913-14-ம் வருஷங்களில் 20,000 ஆக அதிகப்படுத்தப்பட்டது. கோதாவரிஜில்லாவில் கிராமம் விட்டுக் கிராமம் போகக்கூடிய இரண்டு வைத்தியசாலைகளை (Itinerating Dispensaries) ஏற்படுத்தியும் அவை சரியானபடி வேலை செய்யவில்லை. இந்த வைத்தியசாலைகள் முக்கியமாய் மலேரியா என்னும் விஷமஜ்வரத்தைத் தடுப்பதற்காக ஏற்பட்டவை. கடப்பை, கர்னூல், கஞ்ஜம், விசாகப்பட்டணம், கோதாவரி இந்த ஐந்து இடங்களிலும் மேற்கூறிய வைத்தியசாலைகள் (Itinerating Dispensaries) தற்காலத்தில் வேலை செய்யும்படி ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வைத்தியசாலைகள் செய்யும் வேலைகள் திருப்திகரமாக இருந்தால், அவைகளை நிரந்தரமாகவே ஏற்படுத்துவதுடன் இதர இடங்களிலும் அவ்வித வைத்தியசாலைகளை ஸ்தாபிப்பதாய் உத்தேசம்.

ஆயுர்வேத யூனானி வைத்தியங்கள், தகுந்தபடி சாஸ்திரத்தையும் அனுபவத்தையும் அனுஸரித்து நன்றாக நடத்தப்படுமானால், இப்

பொழுது இங்கிலீஷ் வைத்தியமுறைகளுக்குப் பிடிப்பது போலவே அவைகளுக்கும் அவ்வளவு அதிகமான செலவு பிடிக்கும். மேலும், வைத்தியத்தொழில் ஒன்று விலை குறைந்ததாயிருந்தால், அவ்விதம் விலை குறைந்த அறிவை ஆதரிப்பதும் அவசியமா? இப்பொழுது ஆயுர்வேத பாடசாலைகளில் மாணாக்கர் புஸ்தகத்தைப் படித்து வைத்தியர்களாக ஆகிறார்களேயன்றி சாஸ்திரம், அனுபவம் இவைகளுக்கிணங்க (Scientific) வைத்தியம் கற்பதாகத் தெரியவில்லை. அன்றியும், இப்பொழுது எவ்வளவு ஆஸ்பத்திரிகளும் ஔஷத சாலைகளும் இருக்கின்றனவோ, அவைகளுக்கு மட்டும் கூடியத் திரவிய ஸஹாயம் செய்வதாய் இராஜாங்கத்தாரின் எண்ணம்.'' இவர்கள் இவ்விதம் சொன்னது விஸனகரமானது. ஆனரபில் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள் இப்பொழுது மிஸ்டர் சிவஸ்வாமிஅய்யர் சொல்வதையெல்லாம் யோசிக்காமலே ஆயுர்வேத பாடசாலையையும், ஆயுர்வேத வைத்திய சாலையையும் ஏற்படுத்தினாரென்று ஒருவரும் சொல்லமாட்டார். இப்பொழுது ஆயுர்வேத பாடசாலைகளில் ஸாத்தியமான வரையில் சாஸ்திரங்களைக் கொண்டும், அனுபவங்களைக் கொண்டும் வைத்தியத்திற்கு வேண்டிய விஷயங்கள் கற்பிக்கப்படுகின்றன. இந்த வைத்திய சாலைகளுக்கும், பாடசாலைகளுக்கும் கவர்ன்மெண்டார் சிறிதேனும் ஸஹாயம் செய்தால், ஐயரவர்கள் சொல்லும் விதமாக சாஸ்திர போதனையில் இன்னும் அனேக சீர்திருத்தங்கள் செய்ய முடியும். அதை விட்டு, கேவலம் புஸ்தக பாடமாக இருக்கிறதென்று சொல்லி இவ்வித கலாசாலைகளில் படித்த ஆயுர்வேத வைத்தியர்களைப் புறக்கணித்தால், இப்பொழுது இவர்களுக்கிருக்கிற யோக்கியதை கூட இனி சுதேச வைத்தியர்களுக்கு ஏற்படாமற் போய்விடும். இராஜாங்கத்தாருக்கு இவ்வித விஷயங்களில் செலவிடுவதற்கு வேண்டிய திரவியம் இல்லையென்று சொல்வது அவ்வளவு திருப்திகரமாக இல்லை. ஊரூராய்ச் செல்லும் வைத்தியசாலைகளை ஏற்படுத்துவதற்கு எவ்வளவு திரவியம் செலவழிக்கப்படுமோ அதில் பத்தில் ஒரு பங்கு திரவியம் ஆங்காங்குள்ள திறமைசாலிகளான சில சுதேச வைத்தியர்களுக்குக் கிராண்டாகக் கொடுக்கப்படுமானால், சுதேச வைத்தியர்களுடைய உத்ஸாஹத்திற்கும், சுதேச வைத்தியம் சீர்படுவதற்கும் ஒருவிதமான வழி ஏற்படும். ஊரூராய்ச் செல்லும் வைத்தியசாலைகளை விட இந்த வழியை அனுஸரிப்பதால், பணச் செலவும் கஷ்டமும் குறையும்.

இப்படி இப்பொழுது சென்னை சட்ட ஸபையில் நடந்தேறிய வைத்திய மசோதா விஷயமான நிபந்தனைகளையும், அவைகளைப் பற்றிய நமது அபிப்பிராயங்களையும், நாமறிந்தபட்டும் பொது ஜனங்களுடைய கொள்கை இவ்விதமாயிருக்கின்றதென்பதையும் ஒருவாறு விவரித்தோம். நமது தேசத்தில் சுதேச வைத்தியர்கள் சுமார் 36,000 பேர் இருக்கிறார்களென்று சொன்னாலும், அவர்களில் படித்தறிந்து நாகரிகம் பெற்ற வைத்தியர்கள் அவ்வளவிருக்கமாட்டார்கள். ஆகிலும், இப்பொழுதிருக்கும் இங்கிலீஷ்டாக்டர்களின் தொகையை விட, படித்தறிந்து நாகரிகம் பெற்ற சுதேச வைத்தியர்களின் தொகை சுமார் பத்து மடங்காவது அதிகமிருக்குமென்பதில் ஸந்தேஹமில்லை. இந்த சுதேச வைத்தியர்களால்தான் தேசத்தில் பெரும் பான்மையான ஜனங்கள் வைத்திய விஷயத்தில் ஆதரிக்கப்பட்டு வருகின்றனர். ஆகையால், பொது ஜனங்களுடைய அபிமானத்தையும் தாக்ஷிண்யத்தையும் விசேஷமாகப் பெற்றவர்கள் சுதேச வைத்தியர்களே. இந்த வைத்தியர்களிடம் அபிமானமுள்ள பொது ஜனங்களும், மேற்

கூடிய வைத்திய மகாசபையில் கண்ட விவரங்களையெல்லாம் நன்றாக ஆலோசித்து, இவ்விஷயமாக பத்திரிகைகளில் வந்திருக்கும் அபிப்பிராயங்களையும் கவனித்து, ஆங்காங்கு ஸபைகள் கூடி, தமது அபிப்பிராயங்களையெல்லாம் வெளிப்படையாக அறிவித்து, அநேக விண்ணப்பப்பத்திரங்கள் தயார் செய்து, ஆயுர்வேத யூனானி வைத்தியங்களை அபிவிருத்தி செய்யும் விதமாக இராஜாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ள வேண்டும். மேலும் இதைப் படிக்கும் ஒவ்வொருவரும் தமது அபிப்பிராயத்தையும், தமக்குத் தெரிந்த இதரஜனங்களுடைய அபிப்பிராயங்களையும் எழுதி, தம்முடையவும், தமக்குத் தெரிந்த இதர ஜனங்களுடையவும் கையொப்பங்கள் அடங்கிய கடிதங்களை எமக்கு அனுப்பினால், நாம் அதற்கு மேல் செய்யவேண்டிய பிரயத்தனங்களை செய்ய முயற்சிப்போம். சீக்கிரத்தில் சில ஆயுர்வேத யூனானி பாடசாலைகளும், வைத்தியசாலைகளும், தகுந்த விதமாய் ஏற்படுத்தப்படுவதுடன், இங்கிலீஷ் டாக்டர்களைப்போல் நமது சுதேச வைத்தியர்களையும் பதிவு செய்வதற்காக ஒரு ரெஜிஸ்டர் ஏற்படுத்தவேண்டுமென்றும், நமது வைத்தியர்களைக் கொண்டே கிராமாந்தரங்களில் வைத்தியசாலைகள் ஏற்படுத்தப்படவேண்டுமென்றும் இராஜாங்கத்தாரைக் கேட்டுக்கொள்வதற்கு ஆங்காங்குள்ள வைத்தியர்களும் ஜனங்களும் விசேஷமாக முயற்சி செய்யவேண்டும்.

DIARRHŒA-INFANTILE.

குழந்தைகளுக்குக் காணும் அதிஸாரம்.

இந்தியாவில் அதிஸாரம் அல்லது வயிற்றுப் போக்கால் துன்பப்படும் சிசுக்கள் அளவிறந்தவை. இவ்வித ரோகம் உண்டாவதற்குக் காரணமென்ன? இதனால் ஏற்படும் விகாரங்கள் என்ன? பிறகு செய்யக்கூடிய பொதுவான சிகித்ஸா முறைகளென்ன? என்பதைப் பற்றி அனைவரும் சிறிது அறிந்திருப்பது நலம்.

ஒரு குழந்தைக்கு தினந்தோறும் இரண்டு அல்லது மூன்று தடவை ஸாதாரணமாய் மலங் கழிவதும், அந்த மலம் புளிப்பு வாஸனையில்லாமல் சிறிது மஞ்சள், அல்லது இலைப்பசுமை நிறமுள்ளதாகவும் கொஞ்சம் இளகலாகவும் இருக்கும். இவை ஆரோக்யக் குறிகள்.

அதிஸாரத்திற்குக் காரணங்கள்.—குழந்தைகளுக்கு ஊட்டப்படும் உணவுகளிலுள்ள தோஷங்களாலும், ஈரத்தினால் சதுப்பான இடங்களில் குழந்தைகளை விட்டிருப்பது அல்லது அவற்றிற்கு விசேஷமாக ஜலதோஷம் பிடிப்பது இவைகளாலும், காலதேசங்களுக்கு ஏற்ற நல்ல உடைகளில்லாமையாலும், முதலில் கொடுத்த ஆஹாரம் ஜீர்ணமாகாமலிருக்கையிலேயே மறுபடி ஏதேனும் உணவுகளைக் கொடுப்பதாலும், குடலில் மலம் இறுகிப்போய் மேன்மேலும் அதிகமாய் சேர்ந்து விடுவதாலும், புதிதாகப் பல் முளைப்பதாலும், வயிற்றில் நாகப் பூச்சிகள் உண்டாவதாலும், குடலில் கழலைரோகம் (Tubercular disease) ஸம்பவிப்பதாலும், கக்குவான் என்னும் பேயிருமலாலும் குழந்தைகளுக்கு அதிஸாரம் உண்டாகும்.

குறிகளும் முகாந்தரங்களும்.—குழந்தைகளுக்கு அதிஸாரம் உண்டாகும்போது வாந்தியும், அடிக்கடி விசேஷமான அல்லது ஸாமானியமான வயிற்றுப் பொருமலும், வயிற்றுளைத்தலும் காணும்; குழந்தை அடிக்கடி வீரிட்டு அழுவதாலும், வயிற்றுப் பக்கமாய் கால்களை மடக்கிக்கொண்டு வலி கண்டது போல் சாய்த்துக்கொள்வதாலும் மேற்படி நோய்கள் இருப்பதாய் எளிதில் அறிந்து

கொள்ளலாம். மலமானது இயற்கையான மஞ்சள் நிறமுடையதாகவும், ஜ்வரக்குறி எதுவும் காணப்படாமலும் இருந்தால், பெரும்பாலும் திடீரென்று ஏதோ முறை தவறாக உணவூட்டியதாலேயோ, அல்லது வவிக்குமிடத்திலுள்ள வாயுவில் மாறுபாடுகள் நேரிட்டதினாலேயோ அவ்வித அதிஸாரம் உண்டானதாகவும், அவ்வியாதிக்கு உடனே பரிஹாரம் செய்வது அவசியமென்றும் உணரவேண்டும். மலம் கழியும்போது முதலில் மஞ்சளாக இருந்து, பிறகு காற்று படப்பட பசுமை நிறமாக மாறினால், வயிற்றில் பித்தநீர் அதிகமாய் சுரப்பதாகவும், அதுவும் கவலைக்கிடமானதே யென்றும் அறியவேண்டும். மலம் மிகவும் பச்சையாகவோ, மஞ்சள் கலந்த பசுமை நிறமுள்ளதாகவோ இருப்பதுடன், புளித்த வாஸனை யுள்ளதாகவும், தோய்ந்த பால் முதலியவற்றின் செதிள்களோடு கூடியதாகவும் (அவ்வித செதிள்கள் ஜீர்ணமாகாத பாலாகவோ அல்லது குடலிலிருந்து பொசியும் கபமாகவோ இருக்கலாம்) பிறகு சிறிது நேரத்தில் ஒருவாறு பச்சையாக மாறுந் தன்மையதாகவும் இருக்குமானால், அப்பொழுது குழந்தைக்கு உபயோகிக்கப்பட்டுவரும் உணவு ஏற்றுக் கொள்ளாமல் குடலில் அழற்சியோ, அல்லது வேறுவிதமான ஒழுங்கீனமோ நேரிட்டிருப்பதாகக் கருதவேண்டும். இவ்விதமாக அதிஸாரம் உண்டாயிருந்தால், தோய்ந்து போன பால் கட்டி கட்டியாய் வாந்தியெடுக்கவும் படும். பேதியின் நிறம் வெண்மையாயிருந்தால், யக்ருத் என்னும் கல்லீரல் அதன் வேலையைச் செய்ய முடியாமல் மந்தமாயிருப்பதாய் அறியவும். மலம் தண்ணீரைப் போல் கழிந்தால், குடலில் மலம் மிகவும் இறுகுவதற்கு ஆரம்பிப்பதாகவும், இதனால் பிறகு கால க்ரமத்தில் மலபந்தம் அதிகரிக்குமென்றும் நினைக்கவேண்டும்; சில ஸமயம் தண்ணீரைப்போல் பேதியாவதுடன், வேறு ஸமயங்களில் சிறிதும் பேதியில்லாமல் மல பந்தத்தினால் குழந்தை வெகு கஷ்டம் அனுபவிக்கும். மலத்தில் வெண்ணிறமான கபம் போன்ற அழுக்கும் சிறிது இரத்த வடிவுகளும் காணப்பட்டால், அது சீதபேதியாகவும் இருக்கலாம். ஒரு வித முற்குறிகளும் தெரியாமல் திடீரென்று பசுமை நிறமாகவும் அல்லது தண்ணீரைப் போலவும் அதிகமாக பேதியாவதுடன், தேஹத்தில் விசேஷமான ஆயாஸமும் உண்டானால், அதை விஷூசி (Cholera) யென்று சொல்லக்கூடும்.

முன் சொன்ன விதமான அதிஸாரத்துடன் இத்தேசத்திய அநேக குழந்தைகளின் குடலில் அழற்சியுடன் வீக்கமும் உண்டாகும். இதை ஆமாதிஸாரம் என்றும், ஆங்கிலத்தில் ம்யூகோ-எண்டிரிடிஸ் (Muco-enteritis) என்றும் கூறுவர். இந்த வியாதியானது, குறிகளிலும் மற்ற விஷயங்களிலும் அதிஸாரத்தை அதிக்கிரமித்ததாகவும், ப்ரவாஹிகா என்கிற சீதபேதியைவிட குணத்தில் சிறிது இளப்பமானதாகவும் இருக்கிறது; ஆகிலும், இது சீதபேதிக்கு ஸமானமாய் அபாயத்தை உண்டாக்கக்கூடும். இவ்வித வியாதி உண்டாயிருக்கையில் ஜ்வரம் 104-டிக்ரி வரையில் அதிகரிப்பதுண்டு; நாடி படபடத்து அடிக்கும்; நாக்கில் வெண்மையான அழுக்கும், நடுவில் சில சிவந்த புள்ளிகளும் படிந்திருக்கும்; சர்மம் வறண்டு விடும்; மூத்திரம் குறைவாக இறங்கும். ஜ்வரம், வெண்மையான சீதம், வயிற்று வலி இவைகளால் இந்த பேதியானது ஸாதாரண அதிஸாரத்தினும் வேறுபட்டதென்று அறியப்படுகிறது; மேலும் இவ்வித பேதியில் மலத்துடன் சிறிதும் இரத்தம் வருவதில்லையானதால், இது சீதபேதி அல்லவென்றும் தெரியவருகிறது. பொதுவாக இதில் வயிற்றுப் பொருமல் விசேஷமா

யிருக்கும். குமட்டலும் அதிகமுண்டு; ஆனால், வாந்தியாவது அரிது. பேதியாகும் போது ஆஸனத்தில் எரித்தலும், குடலில் உளைத்தலும் இசிவும் காணுவது வழக்கம். இந்நிலைமையில் குழந்தையின் பாதங்கள் சீதளத்தினால் குளிர்ந்திருக்கும்; வயிறு சூடாயிருக்கும்; முகம் வாடிப் போகும்; உடல் சுருக்கங் கொள்ளும்; அடிக்கடி கம்பிய குரலுடன் அழும்; இவ்வித ஸமயத்தில் சரீரம் முடிய காக்கை வலியைப் போல் இசிவு காணக்கூடும்; அது பல் முளைக்கும் தருணமாயிருந்தால் இசிவு அவசியம் உண்டாகும். இறுதியில் நாக்கு வறண்டு, நாடியும் வெகு வேகமாய் அடிக்கத் தொடங்கி, தேஹத்தின் இயற்கையான வேலைகளெல்லாம் ஒய்வடையத் தலைப்படுமானால் அபாயகரமான முடிவு ஏற்படும். இவ்வித ஸந்தர்ப்பத்தில் மலத்தில் இரத்தம் வருமானால் பிராணாபாயத்திற்குக் காரணம் அதிகரித்ததாய் எண்ண வேண்டும்.

சிகித்ஸை:—குழந்தைகளுக்கு உண்டாகும் அதிஸாரத்தை, அதிலும் முக்கியமாய் பல் முளைக்கையில் ஸம்பவிக்கும் பேதியை திடீரென்று நிறுத்த முயலுவது பிசகு; குழந்தையின் அவயவங்களுடைய இயற்கைச் செயல்களாலேயே, அப்பொழுது உண்டாயிருக்கும் குடலின் கோளாறுகள் ஒருவாறு தற்காலம் சரிப்படுத்தப்பட்டு, பேதியும் சிறிது குணமாகக் கூடும். பேதி அதிகமாய் ஆகாமல், மலத்தின் நிறமும் இயற்கைக்கு விரோதமாயில்லாமல், விரேகம் சிறிது குழம்பாகவும் இருந்தால், அவ்வித பேதி ஒளஷதமின்றி பெரும்பாலும் தானாகவே நின்றுவிடும். ஆனால், 24-மணி நேரத்திற்குள் மேன்மேலும் வியாதி அதிகரிப்பதாகத் தோன்றினால், சீக்கிரம் தகுந்த சிகித்ஸை செய்யவேண்டும். பேதி வெகு ஸாதாரணமாயிருந்தபோதிலும், ஒரு தினத்திற்குமேல் அது தொடரும்போது சிகித்ஸை செய்யாமலே உபேக்ஷிக்கக் கூடாது. எவ்வித பேதியும் தொடர்ந்து வருமானால், குழந்தைக்கு ஆயாஸம் அதிகமாயேற்பட்டு, சரீர ஸத்வம் குறைந்து, கிரமமாக ஸாதாரண விரேகமே கஷ்ட ஸாத்தியமானதும் நீடித்துப் போராடுவதுமான அதிஸாரமாய் மாறிவிடும்; பிறகு அவ்வித பேதியானது காக்கை வலியைப் போன்ற வாதரோகங்களுக்கும், பிராணாபாயமான இதர வியாதிகளுக்கும் காரணமாகும்.

முதலில், குழந்தைக்கு ஊட்டப்படும் உணவு எவ்விதமாயிருக்கின்றதென்பதை நன்றாகக் கவனிக்க வேண்டும்; அதில் ஏதாவது தவறுதல் இருந்தால், அதை ஒழுங்குபடுத்தி உபயோகிக்குமாறு ஏற்பாடு செய்வதுதான் பிரதான சிகித்ஸைகளில் ஒன்றாகும். குழந்தைக்கு உணவானது ஏற்ற விதமாயில்லாவிட்டாலும், அல்லது மிதமிஞ்சிய ஆஹாரத்தினாலும், போட்டப்படும் பால் ஏதாவது விஷகுணமுடையதாக இருந்தாலும், பாலூட்டுவதற்கு ஆளப்படும் பாத்திரங்களை தகுந்தவாறு சுத்தம் பண்ணாமையாலும் குழந்தைகளுக்கு ஸாதாரணமாய் அதிஸாரம் உண்டாகக் கூடும். சிசுக்களுக்கு நினைத்த போதெல்லாம்—அதாவது, ஒரு முறை உணவூட்டியதும், பிறகு குறைந்தது இரண்டு மணி ஸாவகாசத்திற்குள்ளாக—ஆஹாரம் கொடுக்கக் கூடாது; குழந்தைக்கு வயது வளர வளர, உணவூட்டும் வேளைகளின் மத்திய காலங்களும் முறையே அதிகமாக வேண்டும். எந்த வேளையிலாவது பாலூட்டும் பொழுது, அதற்கு முன் அருந்திய பாலில் சிறிதளவு ஜீர்ணமாகாமல் இரைப்பையில் தங்கியிருந்தாலும், அதன் பயனாக சில நேரங்களில் பேதியாகத் தொடங்கும், அல்லது உடனே குழந்தை உணவை வாந்தியண்ணிவிடும். தாதிகளைக் கொண்டு குழந்தைகளுக்குப் பாலூட்டப் படுங்கால்,

அவர்களுடைய பாலில் ஏதாவது தோஷம் இருப்பதாக அறியப்படுமானால், அல்லது வேண்டிய அளவு அவர்களிடம் பாலில்லாமலிருப்பதாகத் தெரிய வந்தால், உடனே வேறொரு சிறந்த தாதியைப் பாலூட்ட அமர்த்தவேண்டும்; மேலும் பாலில் தோஷம் ஏதோ இருந்ததாக அறியப்பட்டதும், குழந்தைக்கு இரண்டு மூன்று தடவை விரேசனம் ஆகும்படி தகுந்த ஔஷதம் கொடுத்து, குடலைச் சுத்தமாக்கி வேறொரு தாதியைக்கொண்டு, அல்லது வேறு விதமான உணவைக் கொண்டு குழந்தையைக் காப்பாற்றுவதுதான் தகுந்த முறையாம். குழந்தையானது கைப்பாலைக்கொண்டு போஷிக்கப்படுவதா யிருந்தால், பால் கறக்கும் பசுவிற்கு இடப்படும் உணவுகளையும் கவனிப்பது அவசியம்.

மருந்து கொடுக்கவேண்டியது அவசியமாக நேரிட்டால், அப்பொழுது $\frac{1}{2}$ தோலா எடை சிற்றாமணக்கெண்ணெயைப் போட்டுவது உத்தமமான சிகித்ஸை; குழந்தைக்கு ஒரு வயது முடிவு பெற்றிருந்தால் 1-தோலா அளவு விளக்கெண்ணெயைக் கொடுக்கலாம். குடலில் அழற்சியுண்டு பண்ணக் கூடியதான எவ்வித தோஷம் சேர்ந்திருந்த போதிலும், அவற்றால் நேரிடும் எரித்தல் முதலியவைகளை நிவிருத்தி செய்வதில் விளக்கெண்ணெய்க்கே விசேஷமான பிரபாவம் உண்டு. வயிற்றில் ஏதாவது தோஷம் தங்கி யிருக்கும்போது ஔஷதத்தினால் பேதியைக் கட்டுவது பிசகு; அவ்விதம் கட்டினால் வயிற்றில் தங்கிய தோஷத்தினால் வயிற்றுப்பொருமலும், வாந்தியும், அவயவங்களில் இசிவும் உண்டாய் குழந்தைக்கு அபாயம் நேரிடும். ஆகையால், முதலில் சிறிதளவு ஆமணக்கெண்ணெயைப் போட்டி, அதனால் குடலை ஒருமுறை சுத்தப்படுத்தினால், அஜீர்ண தோஷம் முதலியதால் உண்டான அதிஸாரமும் தானே நின்று விடும். இதன் பிறகும் பேதி நிற்காவிட்டால், கர்க்கடகச்ருங்கியை (கடுக்காய்ப்பூ) சூர்ணம் செய்து, அதில் 1-அல்லது 2-நெல்லெடை எடுத்து வெந்நீரில் கலக்க 3-மணி நேரத்திற்கு ஒரு முறை கொடுத்து வரலாம். குழந்தை ஒரு வயதுக்கு மேற்பட்ட தாயிருந்தால், இந்த சூர்ணத்தை 4 நெல்லெடை வரையில் கொடுக்கலாம். இதற்கு அநுபானமாக தேன் வேண்டுமானால் உபயோகிக்கலாம். ஜ்வரமும் தொடர்ந்திருந்தால், தும்பை வேர் $\frac{1}{4}$ பலம் எடுத்து, $\frac{1}{2}$ ஆழாக்கு ஜலத்தில் இடித்துப் போட்டு, $\frac{1}{8}$ பங்காகக் காய்ச்சி வடிக்கட்டி, கர்க்கடகச்ருங்கி சூர்ணத்தையும் முன்சொன்ன அளவில் இக்கஷாயத்தில் சேர்த்து, ஒரு தினத்திற்கு மூன்று அல்லது நாலு தடவை கொடுக்கலாம். மலம் புளிப்பு நாற்றமுடைய தாயிருந்தால், போட்டப்படும் பாலில் ஒரு தேக்கரண்டியளவு சுண்ணாம்புத் தெளிவு நீர் சேர்த்து உபயோகிப்பது நலம். மலத்திலோ வாந்தியிலோ பால் தோய்ந்துபோய் கட்டி கட்டியாய் விழுமானால், பிறகு; போட்டுவதற்கு முன் பாலை ஒரு முறை கொதிக்க வைப்பது நல்லது. வாந்தியிலும் மலத்திலும் ஜீர்ணமாகாத பால் வருவதாகத் தென்படும்போது, குழந்தைக்குக் கொடுக்கப்படும் உணவுகளில், கூடுமானால் எதையாவது மாற்றி உபயோகிப்பதாலும் ஸௌக்கியமுண்டாகும். அதாவது, ஒரு குழந்தை ஸ்தந்யபானம் செய்தே வளர்ந்து வருகையில், தாயின் பாலில் ஏதாவது தோஷம் ஏற்பட்டு அதனால் குழந்தைக்கு அதிஸாரம் முதலியது உண்டானதாகத் தெரிந்தால், அப்பொழுது தாய்ப்பாலை விலக்கி, பசும்பால் முதலியதை உபயோகிக்கச் செய்யலாம். வேறு சில நிலைமைகளில் தாய்ப்பால் இரண்டொரு வேளைகளிலும், கைப்பால் சில வேளைகளிலுமாய் மாற்றி மாற்றி

யும் கொடுத்துவரக்கூடும். பால் மிகவும் தடிப்பாக இருந்தால், அதை நன்றாக விளாவி, அதில் இரண்டு மூன்று தேக்கரண்டியளவு சுண்ணாம்பு நீர் சேர்த்து குழந்தைக்குப் போட்டு வது உசிதமாம். பேதியானது* வெறும் தண்ணியைப்போல், அல்லது சிறிது மலம் கலந்து வெளிப்பட்டால், அதனால் மலங்கள் கடினமாகப் போய் குடலிலேயே சிக்கிக் கொண்டு, வயிற்றிலுள்ள ஜலபாகம் மாத்திரம் ஏதோ காரணத்தினால் அவ்விதமாக வருகிறதென்று நினைத்து, வயிற்றில் சிக்கிக்கொண்டுள்ள மலத்தைக் கரைத்துக் கழிப்பதற்காக அடியில் குறிப்பிடும் விதமாய் செய்யவேண்டும். ¼ பலம் சிவதை வேரை இடித்துச் சூர்ணமாக்கி, ½ ஆழாக்கு ஜலத்திலிட்டு 1/6 அல்லது 1/8 ஆகக் காய்ச்சி வடிக்கட்டி, அதில் 1-தேக்கரண்டியளவு இந்துப்பைப் பொடித்துச் சேர்த்து குழந்தைக்குப் போட்டிவிடவும்; இதனால், கல்லீரல் மந்தமாயிருந்து அதன் மூலமாய் மலம் வெளுத்திருந்தால், அவ்வித துர்க்குணமும் நீங்கிவிடும். அதிஸாரம் திடீரென்று உண்டாய், ஜலரூபமாகவும், சிறிது இலைப்பசுமை நிறமுடையதாகவும், அதிகமாகவும் ஆனால், காலரா என்கிற விஷூசிக்கு செய்யப்படும் சிகித்ஸையைப் பண்ணவேண்டும். மலத்துடன் சிறிது இரத்தம் கலந்து வந்தால், அடியில் சீதபேதிக்குக் கூறப்படும் சிகித்ஸையைச் செய்வது நலம்.

குடலில் சீதக்கட்டுகள் சேர்ந்துபோய் 'ப்ரவாஹிகா' என்கிற சீதபேதி உண்டாகுமானால், அல்லது மலத்துடன் சிறிது சீதக்கட்டு கலந்து விழுமாயின், ½ சங்கு விளக்கெண்ணெயை சிறிது முலைப்பாலில் கலந்து போட்டலாம். இவ்விதம் செய்தால், வயிற்றில் சேர்ந்திருக்கும் சீதங்களும் மற்றும் தோஷங்களும் கழுவப்பட்டு வெளிவந்துவிடும். மறுபடியும் மறுநாள் சீதம் விழுந்தால், மற்றொரு முறையும் விளக்கெண்ணெயைப் போட்டலாம். தினந்தோறும் வயிற்றின்மேல் வெந்நீரால் நன்றாக ஒற்றிடம் கொடுத்து வரவும். ஜாதிக்காயைச் சூர்ணம் செய்து, அதில் 3 நெல்லெடையும் (1 வயதுக்கு உட்பட்ட குழந்தைக்கு ஒரு நெல்லெடை போதுமானது), சன்னலவங்கப்பட்டையின் சூர்ணத்தில் 3 நெல்லெடையும், ஜ்வரப் பட்டை சூர்ணத்தில் ஒரு நெல்லெடையும் சேர்த்து தேன்விட்டு கலந்து போட்டினால், தீவ்ரமான சீதபேதியும், அப்பொழுதுண்டாகும் வயிற்றுக்கடுப்பும், வயிற்றுப் பொருமலும், ஜ்வரக்குறியும் நின்றுவிடும். குழந்தைக்கு வெறும் பால் ஒத்துக்கொள்ளாமற் போனால், சிறிது சுண்ணாம்புத் தெளிவு நீர் அப்போதைக்கப்போது கலந்து கொடுத்து வரலாம். எவ்வித அதிஸாரமாக இருந்த போதிலும், குழந்தைக்கு உணவைக் குறைவாகக் கொடுத்து வரவேண்டும்; ஆனால் அடிக்கடி கொடுப்பது அவசியம். வயிற்றையும் எப்பொழுதும் சூடாக வைத்திருக்கவேண்டுமாகையால், வயிற்றின்மேல் மெல்லிய கம்பளத்துண்டைச் சுற்றியிருப்பது நலம்.

புராணாதிஸாரம்:—குழந்தைகளுக்குக் காணும் எவ்வித ஸாதாரண அதிஸாரத்தையும் வெகு நாள் வரையில் சிகித்ஸை செய்யாமல் உபேக்ஷித்தால், அது 'புராணாதிஸாரம்' அல்லது நீடித்த அதிஸாரமாக ஆய்விடுகிறது. இவ்வித அதிஸாரத்தினால் க்ரஹணீ என்கிற மற்றொரு வித அஜீர்ணபேதி உற்பத்தியாகும். இரைப்பையின் குடற்பக்கமுள்ள த்வாரத்தின் (Pyloric orifice.) சக்தியிகக் குறைந்துபோய், இரைப்பையில் உணவு பக்குவமாகாமலே குடலில் விழுந்து இவ்வித பேதி ஸம்பவிக்கிறது. முதலில் பல் முளைக்க ஆரம்பிக்கும் பொழு

றும், அல்லது பல்லீறு வீங்கும்போதும் உண்டாகும் அதிஸாரமானது, நீடித்த காலம் தொந்தரவு செய்யும். குழந்தை, வீங்கியிருக்கும் பல்லீறிலிருந்துவரும் ஒருவிதமான திரவத்தை அடிக்கடியும் விழுங்கி விடுவதால், குடலில் ஆஹாரம் ஜீர்ணமாவது சிறிது கஷ்டமாயிருக்கும். அப்பொழுது தினந்தோறும் வெகு துர்க்கந்தமாகவும் வெண்ணிறமாகவும் ஐந்தாறு தடவை பேதியாகும்: சில ஸமயம் பேதி தண்ணிமாதிரியாகவும் இருக்கும்; அப்படி விரேசனம் ஆவதால், குழந்தை நாளுக்கு நாள் மெலிவடைந்தும், உடல் வெளுத்தும், தாதுக்ஷீணமடைந்தும் விடுவது இயல்பு. சரீரத்தின் உஷ்ணம் எவ்வாறு இருக்கின்றதென்பதையும் அப்போதைக்கப்போது கவனித்து வர வேண்டும். சரீரத்தில் ஜ்வரக்குறி ஒன்றும் காணப்படாமலிருந்தால், மேற்கூறிய பேதியினால் திகில் படவேண்டிய அவசியமில்லை. அப்படிக்கின்றி சிறிது ஜ்வரம் வந்துகொண்டிருந்தாலும், மஸூரிகை அல்லது விஸர்பஜ்வரம் (Scarlet fever) அதிஸாரத்துடன் தொடர்ந்து வந்தாலும், அப்பொழுது, குழந்தை அபாயகரமான நிலைமையை கிரமமாக அடையுமென்று நிச்சயிக்கவேண்டும். பிறகு, குடல்களில் அழற்சி அதிகரித்து, அதனால் குடற்கழலை (Intestinel tuberculosis) என்கிற பிராணாபாயகரமான வியாதிக்கு இடமுண்டாவது நிச்சயம். மலத்தில் பித்தநீர் விசேஷமாக கலந்து வருவதே இவ்வித ரோகம் உண்டாவதற்கு முதற் குறியாகும்.

புராணாதிஸாரத்தினால் குழந்தை வருந்தும்போது, அதன்மேல் ஈரமும் குளிரும் தாக்காமலிருப்பதற்காகவும், குழந்தை படுத்திருக்கும் அறையில் வெளிச்சமும் நல்ல காற்றும் தகுந்தவாறு இருக்கும்படியாகவும், சீக்கிரம் ஜீர்ணமாகக் கூடிய தகுந்த உணவுகளை ஸமயம் அறிந்து ஊட்டி வருவதற்காகவும் வெகு ஜாக்கிரதை யெடுத்துக்கொள்ள வேண்டும். குழந்தை, பால் தவிர இதர உணவுகளையும் ஸாப்பிடக் கூடியதாயிருந்தால், கோதுமை ரொட்டியை பாலில் சமையல் செய்து குழம்பு போல் பக்குவம் பண்ணி கொடுத்து வருவது நலம். பசுமையான நல்ல காய் கறிகளை தகுந்தவாறு சமையல் செய்து சிறிதளவு வேண்டுமானால் உபயோகிக்கலாம். தடிப்பான பாலை நன்றாகக் காய்ச்சாமலும் விளாவாமலும் கொடுக்கக் கூடாது. இவ்வித நிலைமைகளில் குடலில் அழற்சியை யுண்டுபண்ணாத ஆஹாரம் கொடுத்துவரவும். மாசக்காய் சூர்ணத்தில் 30 நெல்லெடை, இலவங்கப்பட்டையின் சூர்ணம் 15 நெல்லெடை, இரண்டையும் சேர்த்துத் தேன்விட்டு இழைத்து, 6 அல்லது 8 மாத்திரைகளாகச் செய்து, மூன்று அல்லது நாலு மணிக்கு ஒரு முறை கொடுத்துவர குணமுண்டாகும். குடலில் கழலை முதலியது இருப்பதாகத் தெரியவந்தால், தகுந்த வைத்தியரிடம் குழந்தையைக் காட்டி சிகிச்சை செய்ய வேண்டும்.

PUBLIC SERVICE COMMISSION AND MEDICAL DEPARTMENT.

பப்ளிக் ஸர்விஸ் கமிஷனும் வைத்திய இலாகவும்.

ரெவினியூ, இஞ்ஜனீரிங் முதலிய இலாகாக்களில் உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் விஷயத்தில் அவர்களுக்குள்ள சம்பளம் முதலியவற்றை எவ்வாறு சீர்திருத்தவேண்டுமென்று இந்தியாவில் பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் விசாரணை செய்து வருவதை அனேகர் அறிந்திருக்கின்றனரல்லவா? இப்பொழுது டெல்லியில் அந்த கமிஷனுடைய விசாரணை நடந்து முடிந்தது. சென்ற நவம்பர்மாதம் 21-ம் தேதியன்று வைத்திய இலாகா விசாரணை எடுத்துக்

கொள்ளப்பட்டது. இங்கிலீஷ் வைத்தியர்கள் இப்பொழுது வஹிக்கும் உத்தியோகங்களில் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் எவ்விதமாயிருக்க வேண்டுமென்பதே இந்த கமிஷனால் விசாரிக்கப்பட்டது. இதில் முதல் ஸாக்ஷியாக விசாரிக்கப்பட்டவர் இந்தியா கவர்ன்மெண்டில் உத்தியோகம் வஹிக்கும் ஸர்ஜன் ஜெனரல் ஹூகிஸ் என்பவரே. அவருடைய ஸாக்ஷியம் பின்வருமாறு:—

ஸர்ஜன் ஜெனரல் ஹூகிஸ்.

இப்பொழுதுள்ள ஏற்பாடே நன்றாக இருப்பதால், பயிற்சி முதலியவற்றைப்பற்றி நான் ஒரு புது அபிப்பிராயமும் சொல்லவில்லை. இந்தியன் மெடிகல் ஸர்விஸில் மொத்தம் 748 உத்தியோகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றில் 722 உத்தியோகங்கள்தான் இப்பொழுது பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. அந்த 722 ஸ்தானங்களில் 54 ஸ்தானங்கள் இந்தியர்களால் வஹிக்கப்படுகின்றன. 6 வருஷகாலம் ராணுவ ஊழியத்திலிருப்பதால் பாதகமொன்றுமில்லை. திறமையுள்ளவர்கள் உத்தியோகத்துக்கு வருகிறதில்லை என்பது நிச்சயம். சென்ற சில வருஷங்களாக இந்தியர்கள் முன்னைக் காட்டிலும் அதிகமாகத் தான் நியமிக்கப்படுகிறார்கள். கொஞ்சகாலமாக நியமிக்கப்பட்ட 72 உத்தியோகஸ்தர்களில் 15 பெயர் இந்தியர்கள். வைத்திய இலாகாவின் ஸிவில் வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று உத்தியோகஸ்தர்கள் கொடுத்திருக்கும் மனுக்களின் கணக்கைப் பார்த்தால் இந்தியர்களில் 100க்கு 52 பெயர்களும், ஐரோப்பியர்களில் 100-க்கு 82 பெயர்களும் ஸிவில் உத்தியோகத்தையே விரும்புகிறதாகத் தெரிகிறது.

சேர்மன்—ஆகையால் ஸிவில் உத்தியோகத்தைக் காட்டிலும் ராணுவ உத்தியோகத்தையே இந்தியர்கள் சிரேஷ்டமென விரும்புகிறார்கள் எனத் தெரிகிறது!

பிறகு ராணுவ இலாகாவின் தேவையைப் பற்றி ஸாக்ஷி பின் வருமாறு சொன்னார்.

“இந்திய வைத்திய இலாகாவில் உத்தியோகம் விரும்புகிறவர்களின் தொகை குறைந்துபோய்விட்டது. இங்கிலாந்தில் ச்வாஸாசயக் கழலை நோய் வைத்திய[illegible]க்கு எவ்வளவு பெயர்கள் கிடைத்தாலும் வேண்டித்தான் இருக்கிறது. ஆகையால் திடீரென்று யுத்தத்துக்குத் தயாராகும்படி நேர்ந்தால், இங்கிலாந்தையும் குடியேற்ற நாடுகளையும் நாம் நம்பியிருந்தால் ஒடிந்த நாணலை ஊன்றிக் கொள்வது போலிருக்கும். உத்தியோகம் வஹிக்கத்தக்க வைத்தியப்பட்டம் பெற்ற மெம்பர்களாக 1771 பெயர்கள் சுயமாகத் தொழில் செய்கின்றனர். ஐரோப்பியர்களும் யூரேஷியர்களும் பெரிய கம்பெனிகளுடன் ஒப்பந்தம்செய்து கொண்டு வேலையிலிருக்கிறார்கள். இந்தியர்களில் அநேகர் பெரிய பட்டணங்களில் பெருக்கத் தொழில் செய்து கொண்டிருப்பதால், அவர்களும் ஸமயத்துக்கு உதவமாட்டார்கள். மற்றவர்கள் சண்டைக்குதவாத ஜாதிகளைச் சேர்ந்தவர்களாகையால், அவர்கள் வருவதாயிருந்தாலும் நாம் விரும்பக் கூடியதல்ல.

கல்கத்தாவிலும், சென்னையிலும், பம்பாயிலும், லக்னௌவிலும், லாகூரிலும் செய்து வைக்கும் பயிற்சியைப்பற்றிக் கேட்டாலோ, அங்கு செய்விக்கப்படும் பயிற்சி போதுமானதே; இங்கிலாந்தில் செய்விக்கப்படும் பயிற்சியைக் காட்டிலும் சில விஷயங்களில் சிரேஷ்டமென்று கூடச் சொல்லாம். ஒரு குறைதான் சொல்லக்கூடும். பட்டங்கள் கொடுப்பதற்கு முன் அவர்கள் அநுபவத்தில் பயிற்சி பெறும்படி கட்டாயப்படுத்தப்படவில்லை. இவ்வளவு பிரஸவங்களுக்கு ஒரு மாணவன் வைத்

[வைத்தி]யம் செய்திருந்த[ா]ல் [த]ான் பட்டம் பெறலா [மெ]ன்று ஒரு விதி [இரு]க்கிறது. இந்தியாவில் அப்படிச் செய்வது [சா]த்தியமாயில்லை. ஆகை யால் ஸ்த்ரீ வியாதிகளின் சிகித்சையிலும் பால வியாதி சிகித்சையிலும் மாணவர்கள் அநுபவம் பெறத்தான் வேண்டுமென்று கட்டாயம் செய் யவேண்டியது [அவசி]யமாயிருக்கிறது.

ஸ்த்ரீகளு[க்கு மா]த்திரம் வைத்திய காலேஜ் இந்தியாவில் [ஏற்ப]ட்டில்லாததால், உயர் வகு ப்பு ஸ்த்ரீ[கள்] வைத்தியம் கற்றுக்கொள் ளத் தடையாயிருக்கிறது டெல்லியில் இந் திய ஸ்த்திரீகளுக்காக ஏற்படப்போகும் "லேடி ஹார்டிஞ்சு மெடிகல் காலேஜ்" உண்டாய்விட் டால், உயர் வகுப்பு இந்திய ஸ்த்ரீகள் அதில் சேருவார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் முடிவாய் விட்டன. லேடி ஹார்டிஞ்சு டெல்லிக்குத் திரும்பி வந்தவுடன் இன்னின் னார் அதில் படிக்கத் தெரிந்தெடுக்கப்பட் டிருக்கிறார்கள் என்று அறிவிக்கப்படும்.

ஒரு யோக்கியதையும் இல்லாதவர்கள் டாக்டர் என்று தாங்களே பட்டம் வைத்துக் கொண்டு விடுகிறார்கள். அதைத் தடுப்பதற் கா[க] பம்பாய் சட்ட ஸபையில் 1912-ம் வரு ஷத்தில் ஒரு சட்டம் செய்யப்பட்டது. அது போன்ற ஒரு மஸோதா சென்னை சட்டஸபை யில் ஆலோசனையிலிருந்து வருகிறது. அ[டுத்]த [கா]ரிகாலத்தில் வங்காள சட்ட ஸபையிலும் ஒரு மஸோதா கொண்டுவரப்படும்.

ஸர்ஜன் ஜெனரல் லூகிஸ் விசாரிக்கப்பட்ட பிறகு, மேஜர் பேர்ட் என்றவர் விசாரிக்கப் பட்டார். மருத்துவ விஷயமாகவும், பாலர் ரோகங்கள் விஷயமாகவும் ப்ரிட்டிஷ் தேசத் தில் சிரேஷ்டமான பயிற்சி பெறக் கூ[டி]... யிருக்கிறதென்றும், ஸிவில்ஸர்ஜன் ... பியர்களின் குடும்பங்களுக்கு ... செய்யக்கூடியதா யிருப்[ப] ... ஐரோப்பியர்களாகத் ...

யது என்றும் அவர் சொன்னார். மிஸ்டர் கோகலே கேட்க, அந்த நியாயம் இரு கக்ஷிக் கும் சரிதானென்றும், ஆனால் இந்திய ஸ்த்ரீ கள் யாரிடத்திலும் வைத்தியம் செய்துகொள் ளப் பிரியப்படாததால், ஸிவில் ஸர்ஜன் ஐரோ ப்பியராக இருப்பதால் பாதகமில்லை என்று பதில் சொன்னார்.

மிஸ்டர் கோகலே—நீங்கள் சொல்வது சரியாயில்லை. கோஷா ஏற்பாடு அதிகமாக இருக்கும் இந்த ஐக்கிய மாகாணத்தில் எப் படி இருக்கிறதோ தெரியவில்லை; ஆனால் மற்ற இடங்களில் அப்படியில்லை. சொந்தத்திலேயே வைத்தியம் செய்துகொண்டு ரொம்ப கீர்த்தி பெற்றவர்களாக இருப்பவர்களை வைத்திய காலேஜ்களில் போதகர்களாக நியமிக்கலாமா?

பதில்—நியமிக்கலாம்.

பிறகு காப்டன் பாக்கின்ஸன் விசாரிக்கப் பட்டார். அவருக்குப் பின் ம[ிஸ்டர்] பானர்ஜி விசாரிக்கப்பட்டார். அவர் ஒரு ஸிவில் அஸிஸ்டெண்டு ஸர்ஜன். சம்பளம் போத வில்லை என்பதும், பெரிய உத்தியோகங்கள் கொடுக்கப்படவில்லை என்பதுமே தமக்கும், தம்மைப்போலொத்த ஸிவில் அஸிஸ்டெண்டு ஸர் ஜன்களுக்கும் குறையென்று அவர் சொன் னார்.

அவருடன் அன்று விசாரணை முடிந்தது.

பிறகு 24-11-13 இல் விசாரிக்கப்பட்ட முதல் ஸாக்ஷி அஸிஸ்டெண்டு ஸர்ஜன் மாலர். இவர் இந்தியன் மெடிகல் ஸர்விஸைச்சேர்ந்த வர்களுக்குள்ள வஸதிகளெல்லாம் ரயில்வே அஸிஸ்டெண்டு ஸர்ஜன்களுக்கும் வேண்டு ... பெரும் ஒரே வேலைகளைத் ... [என்]றும் சொன்னார்.

... [ர]ல்ஸில்.

... [இ]வில் விசாரிக்கப் பட் ... ஸெண்ட்ரல் ஜெயிலின் ... [டெ]ண்டு.

ஜெயில் உத்தியோகம் ஒருவருக்கும் பிரியமாயில்லை என்றும், இந்தியன் மெடிகல் உத்தியோகஸ்தர்கள் ஜெயில்களை நன்றாகவே பரிபாலனம் செய்து வந்திருக்கிறார்கள் என்றும், அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்றும், ஜெயில் ஸூபரின்டெண்டெண்டுகளாக அஸிஸ்டெண்டு ஸர்ஜன்களை நியமிக்கக்கூடாதென்றும், கைதிகளுடைய தேஹஸௌக்கியத்தை அறிந்து சொல்வதற்காக ஸூபரின்டெண்டெண்டு அல்லாத இன்னொரு மெடிகல் ஆபீஸரை நியமிக்கத் தேவை யில்லை என்றும் அவர் சொன்னார்.

லெப்டினண்டு கர்னல் ப்ரௌனிங் ஸ்மித்.

அவர் பஞ்சாப் ஸுகாதாரக் கமிஷனர். ஸுகாதார இலாகாவுக்கு ஸிவில் டாக்டர்களைவிட ராணுவ டாக்டர்களே சிரேஷ்டமென்றும், ஜனங்களுடைய பாஷையையும் பழக்கங்களையும் அறிந்த இந்தியர்கள் பட்டாளங்களைப் பற்றிய ஸுகாதாரவேலைக்கு சிரேஷ்டமென்றும், ப்ளேக் நோயுண்டான காலத்தில் அந்த வேலைக்கு நியமிக்கப்பட்ட இந்தியர்கள் மிக உபயோகமாக இருந்தனர் என்றும், அந்த இலாகாவில் ஆசைக்கு இடமில்லையென்றும், தமக்குள்ளிருக்கும் இரண்டு டிப்டி ஸானிடரி கமிஷனர்களில் ஒருவர் இந்தியரென்றும், இந்தியாவிலுள்ள ஸுகாதார இலாகா உத்தியோகஸ்தர்களை எல்லாம் ஒரு ஜாப்தாவில் காட்டி, காலி உண்டாக உண்டாக மேலுத்தியோகத்துக்குக் கீழ் இருப்பவர்களை உயர்த்த வேண்டுமென்றும், இன்னும் சில விஷயங்களையும் சொ[illegible]

மேஜர் ர[illegible]

ஸுகாதார விஷய[illegible]
உண்டாயிருக்கிற தெ[illegible]
பந்திகளின் தொகை[illegible]
தென்றும், பட்டண[illegible]
விசேஷ கவனம் பெ[illegible]

றும், இவ்விஷயத்தில் [illegible]னங்களுக்கே [illegible] ஊக்கத்தை உண்டுபண்ண[illegible] வேண்டியதற்காக, இந்தியர்களை இந்த இல[illegible]காவில் மிகுதியாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றும், ஆனால் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களின் ஞானம் சிரேஷ்டமாயிருப்பதால் பெரிய உத்தியோகங்களில் தற்காலத்[illegible]ளே இருக்க வேண்டுமென்றும், இந்[illegible]ள்ள மெடிகல் காலேஜ்களில் படித்து [illegible]றினவர்கள் இங்கிலாந்துக்குப் போய் [illegible]ரு இரண்டு மூன்று வருஷம் பயிற்சி பெற்று வந்தால் பெரிய உத்தியோகங்களை அவர்களுக்குக் கொடுக்கலாமென்றும், ஸ்த்ரீ டாக்டர்களை நியமிக்க வேண்டிய அவசியம் மிகுதியாக இருக்கிறதென்றும், சென்னையிலும் பம்பாயிலும் ஸுகாதார வேலையில் ஸ்த்ரீ டாக்டர்களை நியமிக்கத் தலைப்பட்டு விட்டார்களென்றும் அவர் சொன்னார்.

டாக்டர் லான்காஸ்டர்.

அவர் வைத்திய பாதிரி ஸங்கத்தின் கௌரவகாரியதரிசி. ஸிவில் ஸர்ஜன்க[illegible]கு வேலை அதிகமாக இருக்கிறதென்றும், அ[illegible]வர்களின் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்றும், சொந்தத்தில் வைத்தியஞ்செ[illegible]து கொண்டிருக்கிறவர்களை கௌரவஸர்ஜனகளாக கவர்ன்மெண்டு ஆஸ்பிடல்களில் சேர்த்துக்கொண்டால் நன்மை உண்டாகுமென்றும், ஸிவில் ஸர்ஜன்கள் பணம் வாங்கிக்கொண்டு பிரத்தியேகமாக வைத்தியம் செய்வதை நிறுத்திவிட்டு அவர்களுக்கு அந்த நஷ்டத்துக்காக [illegible]விட வேண்டுமென்றும், கீழ் அந்[illegible] [illegible]க்டர்களும் பணம் பெற்றுக் [illegible]என்றும், அது நியாயமே [illegible]ப்பவர்களுக்கு அதிக [illegible]கவர்களுக்கு அவ் [illegible]மேலும் வைத்தி[illegible] [illegible] இந்தியாவி[illegible]

[illegible] இன்ன ஜனங்கள் எல்லோருக்குமே வைத்திய [உத]வி கிடைக்கும்படியான காரியத்தைச் செய்யவேண்டுமென்றும் அவர் சொன்னார்.

இவ்வித விசாரணைகளாலும், ஸாக்ஷியங்களாலும் இங்கிலீஷ் வைத்தியத்தில் பயிற்சி பெற்ற இந்தியருக்கு எவ்வளவு உயர்ந்த ஸ்தானங்கள் [illegible] வேண்டியது அவசியமென்பத[illegible] நாம் இங்கு எடுத்துச்சொல்வது அவசியமில்லை. ஆனால் ஒன்று மட்டும் குறிப்பிடாமலிருக்கக்கூடவில்லை. அதாவது, இங்கிலீஷ் வைத்தியர்கள் இப்பொழுதே விசேஷமான செல்வாக்கையும், அளவற்ற ஸ்வாதந்த்ரியங்களையும், பலவித இலாபங்களையும் பெற்றிருக்க, அவை போதாவென்று, மனதால் அளவிடக்கூடாத இன்னும் மேலான பதவிகளைப் பெறுவதற்கு இவ்வாறு பேராசையுடன் வெளிக்கிளம்புவதை பிரத்யக்ஷமாய் [illegible] பார்த்தும், ஆயுர்வேத வைத்தியர்கள் எதாவது ஒரு விஷயத்திலாவது சிறிது முன் செல்லவேண்டுமென்கிற சிரத்தையே [இல்]லாமல், ஒற்றுமையின்றி, தமக்குள்ளேயே [வீ]ண் பொறாமை மேலிட்டு பரிதாபகரமாக [கா]லங்கழித்து வருவதைப் பார்க்க நாம் மிகவும் வருந்துகிறோம். இந்தியாவில் தொன்றுதொட்டு வந்திருக்கும் ஆயுர்வேத முறைப்படி வைத்தியங்கற்றுத் தேறுவதற்கும், அவ்வித [illegible] ண்டில் தகுந்த [illegible]

TREATMENT OF CARBUNCLES AND BOILS BY DILUTE SULPHURIC ACID B.P.

பிரமேஹ பிடகைக்கும் சிலந்திக்கும் விளாவிய கந்தகாம்லத்தினால் சிகித்சை.

[மது மூத்திர ரோகத்தினால் உண்டாகும் பிளவையானது 'பிரமேஹபிடகை' எனப்படும்; இதையே தமிழ் வைத்தியர் 'இராஜபிளவை' என்பார்கள். கட்டிகளும் பெரிய பருக்களும் சிலந்திகளாம்.]

ரைனால்ட்ஸ் என்பவரால் லான்செட் என்கிற வைத்திய பத்திரிகையில் சென்ற மா[ர்]ச்சு மாதத்தில் இவ்வித சிகித்ஸா விஷயத்தைத் தலையங்கமாகக் கொண்ட சிறந்ததோர் வியாஸம் எழுதப்பட்டிருக்கிறது. ரோகிகளை அருகில் வைத்துக்கொண்டு சிகித்சை செய்து தகுந்த அனுபவத்தின்பேரில் இவ்விஷய[ம்] எழுதப்பட்டதாக அவர் கூறுகிறார். மேற்கூறிய ரோகங்களால் வருந்திய பல பேருக்[கு] இவ்வௌஷதத்தைக் கொடுத்து, அவர்களு[க்]கெல்லாம் ஒரே சீரா[illegible] அனேக வருஷ[illegible] அவர் அறிந்தனராம். இதைப்பற்றி [illegible] தின் பல பாகங்களிலுமுள்ள வைத்தியர்களுக்கு எழுதியதில், மேற்கண்ட ரோகிகளுக்கு இந்த ஔஷத பிரயோகத்தினால் திருப்திகரமான குணம் உண்டானதா[illegible] அவர்களு[ம்] அறி[illegible]

[illegible]

குறிப்பிடும் விதமாய் அந்த ரோகத்தில் கிரமமாக மாறுபாடுகள் காணப்பட்டன: முதலில், பிளவையில், பதன் கெட்டு விகாரபடைந்திருக்கும் பாகங்களைச் சுற்றிலும் அந்த விரணத்திற்கு ஓர் எல்லை நன்றாக ஏற்படும்; இவ்விதமான குறி ஔஷதம் கொடுக்க ஆரம்பித்த தும் இருபத்திநாலு மணி நேரத்திற்குள் தெரியவரும்; பிறகு, கிரமமாக விரணம் மெதுப்பட்டு தோல் உரியத் தலைப்படுவதுபோல் தோன்றும்; அடுத்த சிறிது நாட்களுக்குள்ளேயே பிளவையினுள் இருக்கும் சீழெல்லாம் நன்றாக வெளிவந்து, விரணமுண்டான பாகமெல்லாம் சுருக்கங்கொண்டு, புண் ஆறுவதைக் குறிக்கும் பொரி பொரியான தோல் வளர்ச்சியும் தோன்றி, கிரமமாக விரணம் முழுவதுமே மறைந்து விடும். இவ்வித சிகித்ஸைக்கு ஆரம்பித்த சொற்ப நாட்களிலேயே விரணம் ஆறிப்போய் அதன் வாயை நல்ல சதைகள் வளர்ந்து மூடி விடுமென்றாலும், பிளவையின் விஸ்தீர்ணம் ஆழம் இவற்றிற்குத் தகுந்தவாறு விரணக்குறி ஆறி மறைவடையும் காலமும் சிறிது வித்யாஸப்படும்.

கார்பாலிக் ஆஸிட் கலந்த வாஸலின் என்கிற மருந்தை (வாஸலின் 20-பங்கில் 1-பங்கு கார்பாலிக் ஆஸிட்) வேண்டுமானால் விரணத்திற்கு மேலே பூசி, அல்லது லிண்ட் என்று வழங்கப்படும் கவலிகைகளில் தடவி, அதன் மேல் கட்டு கட்டலாம். இதைத் தவிர மேலே வேறொன்றும் [illegible]

டன. சரீரத்தில் பல விடங்களில் உண்டான சினப்புகளும், சிறிய பருக்களும், மற்றும் பல ஸாதாரண விரணங்களும் இவ்வௌஷதத்தை அருந்தியதால் நன்றாகவே குணமாய் விட்டனவாம். இவ்விதம் இதை அனேகருக்கு உபயோகித்து வருகையில், ஒரு ரோகிக்கு மாத்திரம் சில நாள் வரையில் [illegible] தெரியாமலே இருப்பதைக் கண்டு, காரணங்களை ஊக்கத்துடன் தீர விசாரிக்குங்கால், அவன் குடித்து வந்த ஜலத்தினால் குணம் தெரியவில்லையென்று அவர் கண்டு பிடித்தார். அவன் உபயோகித்து வந்த தண்ணீர் ஒரு பாழ்சடைந்த கிணற்றிலிருந்து எடுக்கப்பட்[illegible]கவும், அக்கிணற்றிற்குள் இறந்துபோன [illegible]துக்களின் அவயவங்களும், இலை தழை[illegible] கிப்போய் அமிழ்ந்திருந்ததாகவும் தெரி[illegible]த்து.

அஸாத்திய ரோகங்களைச் சேர்ந்ததும், [illegible]வே பிராணபாயகரமானதென்று மிக[illegible] அஞ்சக்கூடியதுமான பிரமேஹ பிடகைக[illegible] வருந்தும் ரோகிகளுக்கு இவ்வித சிகித்ஸா முறையினால் மிக நன்மை யுண்டாகுமாகையாலும், ஸாதாரணமான சிலந்திகளையும் பருக்களையும் ம[illegible]

DRUGS AND MEDICINES.

ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

வால்மிளகு.

இதை [illegible]க்கோலம் என்றும் சொல்வார்கள். இத
து ஆங்கிலத்தில் குபெப்ஸ் (Cubebes) அல்லது
ஃபியாப்ரக்டஸ் (Cubebae fructus) என்று பெ
. இது இ[illegible]வில் சிறிதளவும், ஜாவா, மொலூ
ம் என்கிற த[illegible]களில் விசேஷமாகவும் விளைகிறது.
திலிருந்து ஒரு வகையான தைலம் இறங்கும்.
தற்குள்ள விருவிருப்பான வாஸனைக்காக இதை
த்தியர் தாம்பூலத்துடன் சேர்த்து ஸாதாரணமாய்
யோகித்து வருகிறார்கள்.

இதன் செய்கைகள்:—உத்தீபனகாரி (Stimu-
t), மூத்ரவிரேஜகம்*, க்ருமிக்நம் (Antiseptic),
ம்லகம் (Laxative), மூத்ரவிரேசகம் † (Diuretic)
எபவைகளாம். மேலும் மூத்ராசயம், சுக்ராசயம்,
[illegible]ராசயம் என்னும் அவயவங்களில் சூலப்ரசமநம
terative) என்கிற செயலும் இதற்குண்டு.

ஆ[illegible]வே மூத்திரமார்க்கங்களிலும், கர்ப்பாசயம் மூத
[illegible]ஜநநாவயவங்களிலும் உண்டாகும் சில கோளாறு
ப் போக்குவதற்கு இந்த சரக்கை விசேஷமாய்
த்தியர்கள் உபயோகப்படுத்துகிறார்கள். மேஹ
ள்ளை யென்னும் ப்ரமேஹரோகம் ஆரம்பிக்கையில்
ல்மிளகை சூர்ணம் செய்து வேளைக்கு அரைக்
் பலம் விதம் இரண்டு அல்லது மூன்று வேளை
கொண்டு வரலாம்.

[illegible]றைகள்:—(1) ஒரு பலம் வால்மிளகு சூர்ணத்
[illegible] தேக்கரா[illegible] [illegible] குங்கிலியத் தைலமும்,
[illegible] [illegible]து ஒருவித [illegible]
துண்டு. இதே கல்கம் இதற்குள்ள லேசகம் (Expe-
ctorant) என்கிற செய்கையினால், ச்வாஸக்குழல்களி
லிருந்து கபத்தை வெளிப்படுத்தி காஸரோகத்தை
(Bronchitis) குணப்படுத்தும்; காஸத்தினால் வரு
தும் சிலருக்கு மற்ற மருந்துகளால் குணமுண்டாகா
லிருக்கையில் இந்த முறை நல்ல குணம் செய்
துண்டு. குங்கிலியத்தைலத்திற்குப் பதிலாக தே
காய்ப்பால் சிறிதளவு சேர்த்து களிம்பு போல் செய்து
மூலரோகிகள் குதத்தினுள் தடவினால் பாதை நி
ருத்தியாகும்; மூலத்திலிருந்து வரும் இரத்தப் பெ
ருக்கும் தற்காலம் சமனமாகும். (2) பெரும்பா
டெனப்படும் ச்வேதப்ரதரரோகத்தில் வால்மிளகு சூ
ர்ணத்தை 25-முதல் 60 குன்றுமணி எடை வரையில்
ஒரு தினத்திற்கு மூன்று வேளை விதம் கொடுப்பதும்
நலம். (3) வால்மிளகுத்தூள் 2-அவுன்ஸ், படி
காரத்தூள் ½ அவுன்ஸ் இவ்விரண்டையும் கலந்து
9 பங்குகளாகச் செய்து, தினத்திற்கு மூன்று வேளை
கொடுத்து வருவதாலும் மேஹவெள்ளை குணப்படும்;
ஆனால் இவ்வௌஷதத்தை உட்கொள்வதற்கு முன்
ஆமணக்கெண்ணெயை விரேசனத்திற்குக் கொடு
த்து, அதன் பிறகு இர[illegible] [illegible] [illegible] குன்
றுமணி யெடை[illegible] [illegible] [illegible]து [illegible]
சேர்த்து இவ[illegible] [illegible] [illegible] ஸாப்பிட்டு, மூத்தி
ரத்வாரத்திலுள்ள [illegible] [illegible] சிறிது தணிந்த
பிறகு [illegible]ிய பொடியைக் கொடுக்கத்துவக்கலாம்.
(4) இதன் சூர்ணத்தை வேளைக்கு 6-அல்லது 8
[illegible]ன்று மணி அளவில் தினத்திற்கு மூன்று த[illegible]
[illegible]ன் [illegible] கங்களிலும், வயது [illegible] [illegible]ர்களு[illegible]

drocotyle Asiatica) என்றும், ஸம்ஸ்க்ருதத்தில் ஹ்ரமீ என்றும் பெயர்.

இதன் செய்கைகள்:—குலப்ரசமநம், பல்யம் (Tonic), சர்மத்தில் உபயோகித்தால் தாஹஹகாரி. சிரங்கு, சொரி, இன்னும் வேறு வகையான புண்கள், குஷ்டரோகம், மற்றும் பல விதமான சர்ம ரோகங்கள் இவைகளில் உபயோகிப்பதற்கு வல்லாரை மிகவும் சிலாக்யமான சரக்கு; யானைக்கால், இரத்தாதிஸாரம், சீதபேதி இவ்வித ரோகங்களிலும் இதை வெளிக்கும் உள்ளுக்கும் கொடுத்து குணம் உண்டாயிருப்பதாகத் தெரிய வருகிறது.

முறைகள்:—(1) செடியிலிருந்து இலைகளை ஜாக்கிரதையாகப் பறித்து, அவற்றில் காம்பு முதலியவை இல்லாதபடி ஆய்ந்து, உடனே ஒரு பாயின்மேல் பரப்பி, நிழலுலர்த்தலாக நன்றாக உலர்த்தி சூர்ணம் செய்து, ஒரு புட்டியில் கொட்டி மூடிபோட்டுவைத்துக் கொள்ளவும். இவ்வளவு ஜாக்கிரதையாக இதைச் செய்யாமற் போனால், இதிலுள்ள தைலம் போன்ற ஸத்வமானது, வெயில் அல்லது அக்னியின் அனல் பட்டு ஆவியாய்ப் போய், இந்த மூலிகை ஸத்வமிழந்துவிடும். இவ்வாறு பக்வம் செய்த சூர்ணத்தில் 5 முதல் 8 குன்றுமணி வரையில் தினத்திற்கு மூன்று வேளை விதம் குஷ்டரோகிகள் உபயோகித்துவரலாம்; அவ்விதம் இதை உட்கொண்டு வரும் பொழுதே, இந்த சூர்ணத்தையே சர்மத்தில் விரணங்களுள்ள இடங்களில் நன்றாகத் தூவி வருவதும் நலம்; அல்லது இந்த சூர்ணத்தில் ஜலம் சேர்த்து கல்கமாகச் செய்தும் விரணங்களின்மேல் வைத்துக் கட்டலாம். இ... செய்... ருவதால் சில நாட்களிலேயே பல வழிகளிலும் ரோகிக்கு குணம் உண்டாகும். இதை சில நாள் வரையில் விடாமலே உபயோகித்து வந்தால், சர்மத்தில் ... கையான சொரியும் தினவும் ஏற்படும்; அப்படியாகும்போது நடுவில் ஒருவாரம் இதை உபயோகிக்காமல், பிறகு முன்போலவே மறுபடியும் உபயோகித்து வரும்படி செய்வது நல்லது. இது குஷ்டரோகத்தை ஒருகால் வேருடன் ஒழிக்காவிட்டாலும் அப்போதைக்கப் போக்கு... க்க...

...றிலும் ¼ பலம் சூர்ணம் வெண்ணெய் சேர்த்து அளவு மட்டும் மிகும் வரையில் காய்ச்சி கொள்ளவேண்டும். (நெய் சேர்த்திருப்பதா... சம்போது வல்லாரையின் ஸத்து நெய்யுடன் கல... விடுமே யன்றி ஆவியாய்விடாது). முதலில் ஒரு ப... உட்கொள்ளலாம்; பிறகு வரவர நாலுபலம் வரை... ஒரு வேளைக்கு ஸாப்பிடலாம். இந்த ...தம் உ... மாதம் என்கிற பைத்தியரோகம், குஷ்டம், அ... மாரம் (காக்கைவலி முதலியது) இவைகளில் ந... குணத்தைத் தரும். ஸ்த்ரீகளுக்கு கர்ப்பாசயத்தை... பற்றிய பலஹீனத்தைப் போக்கி ...பந்தரிக்க... செய்யும். வாக்கு, ஞாபக சக்தி, புத்தி, கண்டத்... தொனி இவைகளை ஒழுங்கு படுத்துங்குணமும் இ... க்ருதத்திற்கு உண்டு. (வாக்படன்.)

அயமும் வெள்ளைப் பாஷாணமும்.

விஷமஜ்வரத்தில் (Malarial fever) கொய்... வைக் கொடுத்து குணமுண்டாகாமலிருக்கையில் வெ... ள்ளைப்பாஷாணம் வெகு நல்ல குணம் தருமென்பதை... வைத்தியர்களில் பெரும்பாலோர் அறிந்திருக்கின்... னர். மேலும் இந்த பாஷாணத்தை வெகு சிறிய ப... மாணங்களில் கொடுத்து வந்தால், சரீரத்திற்கு ப... தையும், இரத்த சுத்தியையும் உண்டு பண்ணுமென்... கருதப்பட்டு வருகிறது. அயமானது இரத்தத்... விருத்தி செய்வதில் நிகரற்ற சரக்கென்றும் சொல்... படுகிறது. ஆகையினால் விஷமஜ்வரம் நீங்கி,... உண்டாகும் ஒருவித பாண்டு ரோகத்தில் அயம்... ஷமாகக் கொடுக்கப்படுவதுண்டு. இவ்விதம் ... ளைப் பாஷாணத்தையாவது, அயத்தையாவது த... தனியே கொடுத்து வருவதால், இரத்தத்திலு... செங்குறு கடங்களில் (Red corpuscles) அட... சோணிதத்தை (Hemoglobin) பலப்படுத்தும் அளவில் அதிகப்படுத்தவோ முடியவில்லையென்றும், ஆனால் இவ்விரண்டையும் தகுந்த அளவில் கலந்து உபயோகித்தால் இரத்தத்தின் முக்கியாம்சமாகிய சோணிதத்தையும், வெண்குறு கடங்களையும் (White corpuscles) க்ருப்திகரமாய் விருத்தியாக்கி பலப்படுத்துகின்றனவென்றும் தெரிய வருகிறது. தனிப்ப... அயம் ஒன் ... ப்பதால் இரத்தத்திலுள்ள ... த்து ... று வாரத்

NOTES AND ITEMS OF INTEREST.

பலவகைக் குறிப்புகள்.

மனதை அளந்தல்:—இவ்விஷயமாக 'பியர்ஸன்ஸ் மகஸைன்' என்கிற பத்திரிகையில் அபூர்வமான ஆ...ச்சி செய்யப்பட்டிருக்கிறது. ஐரோப்பா, ...ரி... இத்...தசங்களில் மனதை (மூளையில் ...தாலும் நடந்தேறும் வேலையின் பரி...ணத்தை) அளப்பதற்காக அனேக அரிய முயற்சி...கள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்காக சில ...மான யந்திரங்களும் கற்பிக்கப்பட்டிருக்கின்றனவாம். கேம்ப்ரிட்ஜ் முதலியவிடங்களி...ள யூனிவர்ஸிடிகளில் இவ்விஷயத்தை ...க்ஷ்மமாக பரிசோதனை செய்வதற்காக அனேக ...ராய்ச்சி சாலைகளும் ஏற்பட்டிருக்கின்றன. இந்த ...திரங்களைக் கொண்டு ஒவ்வொரு மனிதனுடைய ...ணத்திலும் எவ்வளவு நேரத்தில் எவ்வளவு ...சனைகள் அல்லது காரியங்கள் எவ்வாறு நடந்...ற்றென்று நன்கு அறிந்து கொள்ளக்கூடுமாம். ...விஷயத்தைப் பற்றி ஒருவருடைய வியாஸம் ...வைத்திய கலாநிதியின் அடுத்த ஸஞ்சிகையில் விவர...ய் வெளியிடப்படும்.

...ரியாளிகள் ஸௌகாதார இலாகாவின்மேல் ...ய் செய்யலாமா? ஜன நெருக்கமுள்ள ...ங்களில் அல்லது பெரிய ஊர்களில் இப் ...ழுது முனிஸிபாலிடிகளும், யூனியன் என்கிற ...ங்களும் பட்டணத்தின் ஸௌகாதாரம் முதலிய ...றைக் காப்பதற்கும் சீர்படுத்துவதற்கும் ஏற்பட்டி...க்கின்றன. முனிஸிபாலிடிகளில் ஸௌகாதார இலா...விலுள்ள உத்தியோகஸ்தர்கள் சில ஸமயம் அஜாக்...தையாயிருப்பதினால் அவ்வூரில் ஏதேனும் ஓர் ...கத்தில் அல்லது ஒரு வீட்டில் ஜனங்களுக்கு ...ரோக்கியக் குறைவு ஏற்பட்டால், அவ்விதம் துன்...ப்படும் ஜனம் முனிஸிபாலிடியாரின்மேல் நஷ்ட...ட்டுக்காக வியாஜ்யம் செய்து ஜயித்திருப்பதாக, ...வெளிநாடுகளிலுள்ள இங்கிலீஷ் பத்திரிகைகளில் ...ப்போதைக்கப்போது எழுதப்படுவதைப் பார்த்...திருக்கிறோம். ஹெர்ட் போர்ட்ஷைர் அஸீஜெஸ் (Hertfordshire Assizes) என்னும் இடத்தில் ...ஸ்டர் ஜேம்ஸ் ரஸ்ஸெல் என்பவர், ராய்ஸ்டன் அர்...ன் டிஸ்ட்ரிக்ட் கௌன்ஸில் (Royston Urban District Council) என்கிற நகர பரிபாலக ஸங்கத்தாரின்மேல் ஒரு வழக்கு செய்தார். மிஸ்டர் ரஸ்ஸெலுடைய வீட்டிற்கு அருகில், சாக்கடையிலிருந்து துர்நாற்றங்களும் வாயுவும் வெளியிற் போவதற்சென்று ஏற்படுத்திய குழாயின் மூலமாய் ஆகாயம் கெட்டுப்போய், அதனால் அவருடைய மனைவியும், இரண்டு பெண்களும், சில வேலைக்காரர்களும் காயலாவாகப் படுத்துக் கொண்டதனால், அவ்விஷயமாக அவருக்கு நேர்ந்த நஷ்டங்களை டிஸ்ட்ரிக்ட் கௌன்ஸில் ஈடு செய்யவேண்டு மென்று மேற்படியார் வியாஜ்யம் கொண்டுவந்தார். டிஸ்ட்ரிக்ட் கௌன்ஸில் மிஸ்டர் ரஸ்ஸெலுக்கு நஷ்ட ஈட்டுக்காக 125-பவுன், 4-ஷிலிங், 6-பென்ஸ் கொடுத்து விட வேண்டுமென்று கோர்ட்டார் தீர்மானம் செய்தார்கள். இந்தியாவில் எத்தனையோ நகரங்களில் ஸௌகாதார இலாகாவின் அதிகாரிகள் அஜாக்கிரதையாயிருப்பதினால் எவ்வளவோ வியாதிகளும் அஸௌ...கரியங்களும் நேரிடுகின்றனவே! முறையிட்டுக் கொள்ள ஜனங்களுக்கு வாயிருந்தா லல்லவோ பிரயோஜன முண்டு!

அதிஸார ரோகத்தைப் பரிக்ஷிக்கும் முறை:— 'மேரிலாண்ட் மெடிகல் ஜர்னல்' (Maryland Medical Journal) என்கிற வைத்திய பத்திரிகையில், டாக்டர் G. மில்டன் லிந்திகம் என்பவர் அடியில் வருமாறு எழுதுகிறார்:—இது வரையில் பௌதிகபரிசோதனைகளாலும் (By Chemical Examinations), ஸூக்ஷ்மதரிசனயந்திர பரிசோதனைகளாலும் (By Microscopic Examinations) மலங்களைப் பரிக்ஷித்துப் பார்ப்பதில் வெகு ஊக்கத்துடனும், நம்பிக்கையுடனும் கவனம் செலுத்தப்பட்டு வந்தது; ஆனால் அதிஸாரத்தின் (Diarrhoea) மூல காரணங்...யும் மற்றும் அதற்குண்டான விதானங்களையும் (Pathology) கண்ணுங் கருத்துமாக நன்கு கவனித்தால், அ... மல பரிசோதனைகள் அனேக ஸமயங்க... ...யன் படுவ...தில்லை யென்று விளங்கு... ...ரில், பெரும்பான்மையான அ... ...ர அமைப்புகளில் நேரிடு... (Anatomical changes) உண்ட... ...ல்களுக்கு இயற்கையாகவே பழுதை... ...விகமான வெளியும்

தன்மை (Peristaltic movement) உண்டு; குடலின் சுபாவ அமைப்பில் ஏதேனும் கோளாறு நேரிட்டால், பெரும்பாலும் இந்த நெளியுந் தன்மையானது இயற்கையினும் மாறுபாடடையும்; அல்லது குடல் மிகவும் அதிகமாய் நெளியும். அப்பொழுது குடலில் விழுந்துள்ள உணவு முதலியவை, குடலின் அதிகமான நெளிவால் வெகு வேகமாய் மேன்மேலும் தள்ளப்படும். அவ்விதம் வேகமாகத் தள்ளப்படுவதால், ஆஹாரம் குடலின் ஜவ்வினால் தகுந்தவாறு நன்கு உறிஞ்சப்படாமலே (ஆகவே உணவு ஜீர்ணமாகாமலே) மலாசயம் நோக்கி நெகிழ்ந்து விடுகின்றது. இவ்வித நிலைமையில் அதிஸாரமானது, குடல் ஏதோ பிணி கொண்டிருக்கின்றதென்பதை அறிவிக்கும் ஓர் குறியென்பதாகக் கருதப்படவேண்டும். மூலகாரணம் இவ்விதமென்பதை உணர வழியில்லாமல், பலர் மலம் முதலியவற்றைப் பரிசோதிப்பதிலேயே கருத்தாயிருந்து விடுகின்றனர். ஒருவனுக்கு அதிஸாரம் இரண்டு வாரத்திற்கு மேல் விடாமல் போராடி வந்தால், அந்த அதிஸாரம் பெரும்பாலும் இவ்வித காரணத்தினாலேயே உண்டாயிருக்க வேண்டும். சிகித்ஸை செய்வதற்கு, காரணம் இன்னதென்று நிச்சயமாய் அறிந்துகொள்வது முக்கியம். இவ்விஷயத்தை இன்னும் நன்றாக நிச்சயிப்பதற்கு, அதிஸார ரோகிகளின் அடி வயிற்றை நேரில் பரீக்ஷை செய்து, உட்புறத்தில் குடலுக்குண்டான மாறுபாடு முதலியவற்றை நன்கு அறிவிக்கக் கூடியதான ஏதேனும் கருவிகள் ஏற்படுத்த வேண்டியது அவசியமாம்.

ஒரு டோஸ் கொய்னாவால் முற்றிலும் செவிடானது:—பதினாறு வயதுள்ள ஒரு பெண் 15-நிமிஷத்தில் 30-க்ரைன் கொய்னாவை உட்கொண்டாள். பிறகு இரண்டு மணிநேரம் சென்றதும் தாங்கக் கூடாத தலைவலியும், இரண்டு காதுகளிலும் அஸாத்தியமான இரைச்சலும் உண்டானதாய் அவள் முறையிட்டாள். சரீர நிலைமையில் வேறு எவ்வித கோளாறும் காணப்படவில்லை. அவளுடைய காது மாத்திரம் நிமிஷத்துக்கு நிமிஷம் கிரமமாக மிகவும் மந்தமாய் விட்டது. மறு நாள் காலையில் அவளுடைய காதுகள் இரண்டும் முற்றிலும் உணர்ச்சியற்று, எவ்வித பேரிரைத்தலையும் கேட்கக் கூடாதவாறு செவிடாய்விட்டன. ஆயினும், இது கொய்னாவினால் நேரிட்ட தற்கால விகாரமென்றும், கிரமமாக தானே குணமாய் விடுமென்றும் நினைத்து, உடனே தகுந்த வைத்தியம் செய்துகொள்ள பிரயத்தனப்படவில்லை. பிறகு, இவ்விகாரம் நீடித்திருக்கவே, அனேக கர்ண ரோக நிபுணர்களிடம் (Aurists) பல விதமான சிகித்ஸை செய்து கொண்டாள்; ஆனால் ஒன்றிலும் சி[illegible]தும் பயன் காணவில்லை. ஒரு காதுக்காவது ஏதே[illegible] சிறிது குணமுண்டானால் போதுமென்று நி[illegible]றுதியில் வியென்னாவிலுள்ள ப்ரொபஸர் பால[illegible]ஜர் (Professor Politzer of Vienna) என்பவரி[illegible] சென்[illegible]ள். அவர் வெகு ஜாக்கிரதையாக பல பரிசோதனைகள் செய்து பார்த்து, முடிவில் அவளுடைய கர்ணரோகம் அஸாத்தியமானது என்று தீர்மானித்தார். (மெடிகல் ரிகார்ட் ந்யூயார்க் Medical Record, New York.)

தனக்குத் தானே ஔஷதம் செய்து உபயோகித்தல்:—வைத்தியர்களுடைய ஸஹாய[illegible]றியே சிலர் அனேகம் ஔஷதங்களைத் தாமே தயா[illegible]செய்து உபயோகித்துக் கொள்வதை நாம் பார்த்[illegible]ருகிறோம். அவர்கள், புஸ்தகங்களில் எழுதப்[illegible]ள்ள படி ஒருக்கால் எவ்விதமோ ஔஷதம் செ[illegible] உபயோகிப்பதாகவே இருக்கட்டும். ஆகிலும் த[illegible]ந்த வைத்தியர்களுடைய யோசனையில்லாமல் அவ்விதம் செய்வது மிகவும் அபாய கரமானது. பெர்லின் (Berlin) என்கிற நகரத்தில், டாக்டர் மார்கஸ் ஹெஜ் (Dr. Marcus hez) என்பவரிடம் ஒரு வியாதிக்ரஸ்தன் சென்றான். அப்பிணியாளி, 'தானே ஜாக்கிரதையாக மருந்துகளை உபயோகித்துக் கொள்வதற்கு எந்த வைத்திய புஸ்தகங்களைப் படிக்கலாம்?' என்று டாக்டரை வினவினான். அதற்கு டாக்டர் "என் நண்பனே ஜாக்கிரதை! புஸ்தகங்களில் அச்சுப் பிழையிருந்தால், என்றைக்காவது அநியாயமாய் நீ செத்துப்போவாய்!" என்றுபதில் சொன்னார். (டாக்டர்—The Doctor.)

வீட்டின் ஆரோக்ய முறை (The Home Hygiene).—இராயபுரம் வைத்தியபாடசாலையின் அஸிஸ்டெண்டு ஸூபரிண்டெண்டெண்டான டாக்டர் A.M மாசிலாமணி முதலியார், L. M. & S; —வர்களால் இப்பெயருள்ள ஒரு சிறந்த புஸ்தகம் [illegible]கிலத்தில் நூதனமாய் இயற்றப்பட்டிருக்கிறது. [illegible]ல் மனிதருக்குத் தகுந்த ஆஹாரவகைகள், அ[illegible]ற உபயோகிக்க வேண்டிய விதிகள், தற்காலத்தில் [illegible]கரிக ஜனங்களால் உபயோகிக்கப் பட்டுவரும் [illegible]ல் உணவுகளினால் நேரிடக் கூடிய தீங்குகள், [illegible]பானத்தினால் ஸம்பவிக்கும் கெடுதிகள், சீரதத்துவம், பற்பல ரோகங்களில் அனுஸரிக்க வேண்டிய ஸூகாதார முறைகள், உழைப்பு அல்லது வ்யாயாமம், கர்ப்பிணிகளின் உபசாரம் முதலிய அரிய விஷயங்கள் விவரமாகவும் ஸ்பஷ்டமாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. இவர் இங்கிலீஷ் வைத்தியராயிருந்தும், மாம்ஸ போஜனம் முதலியவற்றை அங்கீகரிக்காமல், சாஸ்த்ரீயமாகவும், யுக்தியாகவும், அனுபவத்திற் கிணங்கவும் ஆரோக்ய முறைகளை வேண்டியவளவு விசாரம் செய்து வரைந்திருப்பது நமது வைத்தியர்களாலும், ஆர்யஜனங்களாலும் குறிப்பிடத்தக்கது. இப்புஸ்தகம் வைத்தியர்களுக்கு மிக உபயோகமாயிருக்கும். பொதுவாக அனைவருமே இந்த நூலைப் படித்து ஸாத்தியமான வரையில் அவ்விதமே நடந்து கொள்வார்களானால், பல ரோகங்களிடமிருந்தும் தப்பித்துக் கொள்ளலாம். நல்ல காகிதத்தில் அழகாய் அச்சிடப்பட்டு, சிறந்த பைண்டிம் செய்யப்பட்டிருக்கிறது. விலை ரூபாய் 1.

Supplement to the "VAIDYA KALANIDHI."

"வைத்திய கலாநிதியின் அநுபந்தம்."

இதன் கீழே குறிப்பிடப்படும் நாலு படங்களும், ஒருதுளி ஜலத்தை ஸூக்ஷ்ம தரிசன யந்திரமென்னும் பூதக்கண்ணாடி மூலமாய் காணும்போது தெரியவரும் காட்சியைக் குறிப்பவை.



by
S. Md: Zakir
artist. M.M. College

படம் 1.

சென்னையிலுள்ள குழாய் ஜலத்தினுடைய ஒரு துளியின் காட்சி.

இதில் ஸூக்ஷ்ம ஜீவன்கள் இல்லையென்றே சொல்லலாம்; ஆனால் இதன் நடுவில் சில மாசுகள் காணப்படுகின்றன. அவை நீர்ப்பாசி ஸம்பந்தமான சில பச்சிலைச் செதில்கள்.

படம் 2.

சென்னையில் கச்சாலீச்வர அக்கிரஹாரத்திலுள்ள குளத்துநீரின் ஓர் துளி.

இதில் 1 என்று குறிக்கப்படும் மாசுகள் ஜலத்திற்கு ஒருவித பிசுபிசுப்பைக் கொடுக்கும் நீர்ப்பாசிகளின் துகள்கள். 2 என்று குறிக்கப்படுபவை பற்பல உருவங்களான ஸூக்ஷ்ம ஜீவன்கள். (Microbes)



by
S. Md. Zakir
artist. M.M.C.



படம் 3.

வீதியோரக்கவரிலுள்ள ஜல தாரையிலிருந்து எடுத்த நீர்த்துளியின் காட்சி.

1. முதல் 4-வரையிலும் குறிக்கப்படுபவை ஸூக்ஷ்மஜீவன்கள்.
1. சிறுபொட்டு போன்றவை.
2. இரட்டைப் பொட்டுகளைப் போன்றவை.
3. ஜீவகணக்கள் போன்றவை.
4. உடல் திருகியிருப்பவை.
5. அழுகிக்கொண்டிருக்கும் பூண்டுகள்.
6. ஒரு புழுவின் முட்டை.
7. 9. மிகவும் ஸூக்ஷ்மமான பாம்பு போன்ற புழு.
8. ஒரு நூல்ழை.
10. சில ஸூக்ஷ்ம ஜீவன்கள் விருத்தியாவதைக் குறிக்கும் கொலுசுபோன்ற அவயவம்.
11. 12. பொட்டுகளைப் போன்ற ஸூக்ஷ்ம ஜீவன்களின் கொலுசு.
13. ஒரு விதமான நீர்ப்புழு.

படம் 4.

சிறிது பசுஞ்சாணம் கலந்த நீர்த்துளியின் காட்சி.

1. நூலிழை போன்ற காளான்.
2. பொட்டுகளைப் போன்ற ஸூக்ஷ்ம ஜீவன்கள்.
3. தொடர்ந்திருக்கும் ஸூக்ஷ்ம ஜீவன்களின் கொலுசு.
4. வேறு வகையான சில ஸூக்ஷ்ம ஜீவன்கள்.
5. சில புழுக்களின் உடல்கள்.
6. அழுகிக் கொண்டிருக்கும் பூண்டுகள்.



இந்த சித்திரப்படங்கள் அச்சிடுவதற்கு 'ஆந்த்ரவிஞ்ஞான ஸர்வஸ்வம்'' என்கிற கிரந்தத்தின் [illegible]ப்ளாக்குகள் கொடுத்து உதவியதற்கு நன்றிபாராட்டுகிறோம்.